ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி
சமய - சமூக - இலக்கிய வெளியீடு
ஆகஸ்ட் 2010 25/=

## சமூகத் தொடர்புதினச் சிறப்பிதழ்

திருகோணமலை — மட்டக்களப்பு மறைமாவட்ட
சமூகத் தொடர்பு நிலையத்தின் ஏற்பாட்டில்...

## உலகத் தொடர்புதின விழா - 2010



நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி
நமது வாழ்வை மேம்படுத்துவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஆகஸ்ட் 2010

மலர்- 42 இதழ்- 07

**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
வயலற் சந்திரசேகரம்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

**ஆலோசகர்கள்**
A.G. இராஜேந்திரம்
A.S. யோகராஜா

**கணினி வடிவமைப்பு**
நிரோன்

**ஓவியங்கள்**
சுதா

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.


# உள்ளே




| | |
|---|---|
| அன்புடன் உங்களோடு.... - | 01 |
| உலகத் தொடர்புதின விழா... - | 02 |
| உலகத் தொடர்பாடல்... - | 04 |
| ஈழத்தை அளந்த... - | 06 |
| நவீன தொழில்நுட்ப... - | 07 |
| இலக்கிய மஞ்சரி - | 09 |
| கடுகுக்கதை - | 11 |
| புனித அன்னை தெரேசா - | 12 |
| உங்கள் சுகமான வாழ்வுக்கு... - | 16 |
| உண்மையின் ஒளி (சிறுகதை) - | 17 |
| மருத்துவம் (சிறுநீரகச் செயலிழப்பு...) - | 21 |
| மாணவர் பக்கம் - | 22 |
| தமிழ்த் திரைப்பட... - | 24 |
| விவிலியம் கற்போம் - | 27 |
| அறிவை வளர்ப்போம் - | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com



விலை : 25/=
ஆண்டு சந்தா : 400/=
(தபாற்செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு...

வெகுஜனத் தொடர்புசாதனங்களின்றி நமது வாழ்க்கையைக் கற்பனை செய்து பார்ப்பது கடினம். வெகுஜனத் தொடர்புசாதனம் நமக்குத் தகவல் அளிக்கிறது. பொழுதுபோக்கை அமைக்கிறது. ஏன் நமது வாழ்க்கையை ஆக்கிரமித்து நிற்கிறது எனலாம். தகவல் வழங்கும் புதிய அமைப்புகளான செயற்கைக் கோள், இணையம், செல்போன், மற்றும் வீடியோ ஆகியவை உலகளாவிய தன்மை கொண்டிருக்கின்றன.

ஆகவே, நாம் ஒரு தகவல் தொடர்புச் சூழலில், குறிப்பாக டிஜிற்றல் தொழில்நுட்பச் சூழலில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இவற்றினால் கிடைக்கின்ற வாழ்க்கைப் பாணிகளைப் பற்றிய வர்ணனைகள், நவநாகரிகங்கள், வன்முறை, காதல், புதிய வழிகளில் விபரித்தல் போன்றன நமது கலை கலாசார பழக்க வழக்கங்கள், சமூகப் பண்பாடு மற்றும் மத மதிப்புகள் ஆகியவற்றின்மீது தாக்கம் செலுத்துகின்றன. தொலைக்காட்சி மற்றும் புதிய கவர்ச்சிகரமான இதழ்கள், டிஜிற்றல் தொழில்நுட்ப வளர்ச்சிகள் என்பன நமது வாழ்க்கைப் பாணியை கவர்ச்சிகரமாகக் காட்டுவது மட்டுமின்றி அதனை உறுதியும் செய்கிறது.

நடுத்தர வர்க்கத்தினருக்கு வளர்ந்துவரும் நுகர்வோர் பண்பாடு பிரச்சினையாய் இருக்கின்றது. அதேமாதிரியான செய்திகள் மற்றும் படிமங்களால், நவீன தொழில்நுட்ப ஆதிக்கங்களால் ஏழை மக்களும் மயக்க வெறியூட்டப்படுகின்றனர்.

நமது நிலம், நீர், காற்று முதலியவற்றைப் பாதுகாக்கவேண்டும். அவற்றின்மீது அக்கறை செலுத்தவேண்டும் என்றெல்லாம் மக்களை விழிப்புணர்வூட்டி வரும் நமக்கு நமது நவீன தொடர்பு சாதனங்கள் மற்றும் நவீன தொழில் நுட்பங்களிலும் ஆக்கபூர்வமான விழிப்புணர்வை ஊட்டவேண்டிய கடப்பாடு உள்ளது. இதனை மையமாகக் கொண்டே திருச்சபை உலகத் தொடர்பாடல் தினத்தை வருடா வருடம் அனுசரித்து வருகிறது.

இதற்கமைய திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டசமூகத் தொடர்பு நிலையமும் வருடாவருடம் ஆவணித் திங்களின் முதல் வாரத்தில் உலகத் தொடர்பாடல் தினத்தை அனுசரித்து விழிப்புணர்வூட்டி வருகிறது. இவ்வாறே பாப்பரசர் 16ம் ஆசீர்வாதப்பர் வெளியிட்டுள்ள டிஜிற்றல் தொழில் நுட்பத்தை மறை பரப்புக்காக பயன்படுத்தவேண்டும் என்ற கருப்பொருளுக்கொப்ப "நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நமது வாழ்வை மேம்படுத்துவோம்" என்னும் தலைப்பில் ஆவணி முதலாம் திகதி மட்டக்களப்பில் இவ்விழா நடைபெற்றது. விழாவிலே டிஜிற்றல் தொழில்நுட்பத்தின் நிறைகளும் குறைகளும் ஆராயப்பட்டன. டிஜிற்றல் தொழில்நுட்ப வசதிகளைச் சமூக முன்னேற்றத் திற்காக, சமூக விழிப்புணர்வுகளுக்காக, சமூக விழுமியங்களை வளர்ப்பதற்காக, சமய மதிப்பீடுகளைப் பரப்புவதற்காகப் பயன்படுத்தினால் முழு உலகமும் நலமாய் முன்னேறும். எனவே இளைய சமூகம் இவ்வாறான டிஜிற்றல் தொழில்நுட்பத்தால் கெட்டுக் குட்டிச்சுவராகாமல் அவர்களை நெறிப்படுத்த வேண்டியது சம்மந்தப்பட்ட அனைவரதும் கடமையாகும்.

– ஆசிரியர்



## இறைவாக்கு

"இதோ நான் இந்த மக்களுக்காக மீண்டும் வியத்தகு செயல் புரிவேன். அது விந்தைக்கு மேல் விந்தையாக இருக்கும்"

(எசா: 29:14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உலகத் தொடர்புதின விழா - 2010

"நவீன தொழில்நுட்பங்களைப் பயன் படுத்தி நமது வாழ்வை மேம்படுத்துவோம்" எனும் கருப்பொருளில் திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையம் நடாத்திய உலகத் தொடர்புதின விழா இம்மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

எகெட் நிறுவக இயக்குனர் அருள்தந்தை சிறிதரன் சில்வெஸ்டர் அவர்கள் முதன்மை விருந்தினராகவும் கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் எஸ். மௌனகுரு அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கோறளைப்பற்று தெற்குப் பிரதேசச் செயலாளர் திரு.வி.தவராசா அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.



இறைவணக்கத்தைத் தொடர்ந்து மட்.கலாசார மத்திய நிலைய மாணவியர் தமிழ் வாழ்த்துப் பாட அடுத்து கிழக்குப் பல்கலைகழக அழகியல் கற்றை நிறுவக மாணவியர் வரவேற்பு நடனம் வழங்கினர். மிகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் அமைந்த அந்த நடனத்தைத் தொடர்ந்து வரவேற்புரை வழங்கினார் சமூகத் தொடர்பு நிலைய இயக்குனர் அருள்தந்தை றொஹான் பேணாட் அவர்கள். அவர் தமதுரையில்: 'இன்றைய உலகில் தொடர்புசாதனங்களின் வளர்ச்சியையும் அவை மனிதவாழ்வை ஆக்கிரமித்து நிற்பதையும் அவற்றின் பயன் அறிந்து கையாளும் விழிப்புணர்வு தேவை' எனவும் குறிப்பிட்டார்.

முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்த எகெட் நிறுவக இயக்குனர் அருள்தந்தை சிறிதரன் சில்வெஸ்டர் அவர்கள் தமது ஆரம்ப உரையில்: 'இன்றைய உலகில் மிகவும் ஆற்றல் பெற்று விளங்கும் தொடர்புசாதனங்களை ஆக்கத்திற்குப் பயன்படுத்தவேண்டும் எனவும் ஒரே நேரத்தில் பல இலட்சம் மக்களைச் சென்றடையக்கூடிய இச்சாதனங்கள் மூலம் மறைபரப்புப் பணியாற்றுவது நற்செய்திப் பணிக்கு ஒரு புதிய பரிமாணத்தைத் தருவதாகும்' என இவ்வாண்டுக்கான திருத்தந்தையின் உலக தொடர்புதினச் செய்தியில் கூறப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டினார்.

அன்றைய விழாவில் 'சமூகம் - மதிப்பீடுகள் - டிஜிற்றல் தொழில்நுட்பம்' என்னும் தலைப்பில் சிறப்புரை வழங்கிய பேராசிரியர் மௌனகுரு அவர்கள், சமூகத்தின் தோற்றம், வளர்ச்சி, வரலாற்றில் அது அடைந்த மாற்றம் குறிப்பாக ஐரோப்பியப் புரட்சிகள் சமூக வாழ்வில் ஏற்படுத்திய மாற்றங்கள் பற்றியெல்லாம் மிக விரிவாக எடுத்துரைத்த அவர், வணிக மேலாதிக்கம் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நுகர்வுக் கலாசாரத்தை வளர்ப்பதையும் அவை எவ்வாறு தேசிய இனங்களின் தனித்துவத்தையும் பண்பாடுகளையும் அழித்து தமது வணிகச் சுரண்டலுக்கு வசதியாக ஓர் உலகப் பொதுமையை வளர்க்க முயல்கிறது என்பதையும் விரித்துரைத்தார். மேலும் இன்றைய இளைய தலைமுறையினரை மிகவும் கவர்ந்துள்ள நவீன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தொழில்நுட்பங்கள் அவர்களின் ஒழுக்க வாழ்வுக்குச் சவாலாக விளங்குவதையம் இவை தொடர்பான வழிகாட்டல்களும் விழிப்புணர்வும் இருந்தால் நவீன தொழில்நுட்பங்களால் நமது வாழ்வை மேம்படுத்த முடியும் என்றும் கூறினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய கோறளைப்பற்று தெற்குப் பிரதேச செயலாளர் திரு.வி.தவராசா அவர்கள், நவீன தொழில்நுட்பங்களால் அடையக்கூடிய பயன்கள் பெரிது என்றும் கல்வி மற்றும் ஆராய்ச்சி, தொடர்பாடல் போன்ற வைகளுக்கு நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மிகுந்த பலனைப் பெறக்கூடியதாகவுள்ள அதேவேளை அவைகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டு பல்வேறு சமூகச் சீர்கேடுகள் உருவாகக் காரணமாகின்றன எனக் கூறினார்.








விழாவின் முக்கிய நிகழ்வாக கிழக்கு மாகாணத்தில் சமய, சமூக, கலை, இலக்கிய, கல்வித் துறையில் அரும்பணியாற்றியுள்ள பெருமக்கள் மூவர் இவ்வாண்டுக்கான தொடர்புசாதன விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். திருகோணமலை மறைக்கோட்டத்திலிருந்து கல்வி, இலக்கிய மற்றும் எழுத்துப் பணிகளுக்காக கிழக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிபாளர் திரு.கிறிஸ்டி முருகுப்பிள்ளை அவர்களும் மட்டக்களப்பு மறைக்கோட்டத்திலிருந்து சமய, சமூக, இலக்கியப் பணிகளுக்காக களுவாஞ்சிக்குடி தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு.ஆனந்தா.ஏ.ஜீ.இராஜேந்திரம் அவர்களும் கல்முனை மறைக்கோட்டத்திலிருந்து கல்வி, நாடகம், இசை, எழுத்துப் பணிகளுக்காக திருமதி றோஸ் ஜோசப் அவர்களும் இவ்விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

இவ்விழாவில் மற்றுமொரு சிறப்பம்சமாக அருள்தந்தை றொஹான் பேணாட் அவர்களால் எழுதப்பட்டு அரங்குகள் கண்ட ஐந்து நாடகங்கள் அடங்கிய 'அவங்க பேசமாட்டாங்க' நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. 'எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்' வெளியிட்ட இந்நூல் பற்றி ஆசிரியரது அடக்கமான அறிமுக உரையைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக் கழக அழகியல் கற்கை நிறுவக விரிவுரையாளர் திரு.விமல்ராஜ் அவர்கள் கருத்துரை வழங்கினார். அவர் பேசுகையில்: நாடகங்களில் காணப்படும் பண்பு, பாத்திர வார்ப்பு, அவற்றின் பின்புலன்களை எல்லாம் கூறிச் சென்றவர் நாடகம் பற்றிய கோட்பாடுகளுக்குள் இந்நாடகங்களை அடக்கமுடியாவிட்டாலும் அவற்றில் வெளிப்படும் உணர்ச்சியையும், ஒரு காலகட்டத்துச் சூழலையும் சமூக நிலைமைகளையும் இவை வெளிப்படுத்தி நிற்பதாகக் குறிப்பிட்டார். நூல் வெளியீட்டின் முதல் பிரதியை அருள்தந்தை சிறிதரன் சில்வெஸ்டர் அவர்கள் வெளியிட்டு வைக்க பேராசிரியர் எஸ்.மௌனகுரு அவர்கள் பெற்றுக்கொண்டார்.

மேலும் தொடர்புதினத்தை முன்னிட்டு தொண்டன் சஞ்சிகை நடாத்திய வினாவிடைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும், அர்ப்பணிப்போடு தொண்டன் சஞ்சிகையின் வளர்ச்சிக்குக் கைகொடுத்து நிற்கும் தொண்டன் குடும்பத்தினருக்கான கௌரவிப்பும் இடம்பெற்றது.

இறுதியாக திரு. ஜே.டேவிட் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். நிகழ்ச்சிகளை திரு.ஐ.ஜே.சில்வெஸ்டர் அவர்கள் தொகுத்தளித்தார்.

நீண்டநாட்களின் பின்னர் மட்டக்களப்பு சமூகத் தொடர்பு நிலையம் நடாத்திய இவ்விழாவில் அதிகளவில் பலரும் கலந்துகொண்டு ஒத்துழைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உலகத் தொடர்பாடல் தினத்தையொட்டி திருத்தந்தை வழங்கிய செய்தியின் சுருக்கம் (2010)

## டிஜிற்றல் உலகில் குருக்களும் மேய்ப்புப் பணியும்: தூதுரைப் பணியில் புதிய ஊடகம்

அன்பான சகோதர, சகோதரிகளே!

"டிஜிற்றல் உலகில் குருக்களும் மேய்ப்புப் பணியும்: தூதுரைப் பணியில் புதிய ஊடகம்" எனும் இவ்வாண்டின் உலகத் தொடர்பாடல் தினத்தின் கருப்பொருளானது குருக்களாண்டின் திருச்சபைக் கொண்டாட்டங்களுடன் ஒன்றித்துப் பயணிப்பதைக் குறித்து நிற்கின்றது. தமது தூதுரைப் பணியினை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான நவீன சாத்தியப்பாடுகளை குருக்கள் கண்டுபிடிப்பதற்கான முக்கியமானதும் உணர்வுபூர்வமானதுமான டிஜிட்டல் தொடர்பாடலின் மேய்ப்புத் தளங்களில் தனது கவனத்தை அது குவித்து நிற்கிறது. உரையாடலைப் பரந்த அளவில் ஊக்கப்படுத்துவதற்கும் தொடர்பாடலை வளர்த்தெடுப்பதற்கும் சமூகத்துடன் ஒன்றித்திருக்கவும் பங்குத்தளங்கள் நவீன ஊடகங்களை எப்பொழுதும் பெருமளவில் பயன்படுத்தி வருகின்றன. அண்மைக் காலத்தில் இத்தகைய ஊடகத்தின் திடீர் வளர்ச்சியும் அதன் பெருமளவு சமூகத் தாக்கமும் பயனுள்ள மேய்ப்புப் பணிக்கான அதன் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கிறது.

மனித அவதாரம் எடுத்த இறைவார்த்தையாம் இயேசுக் கிறிஸ்துவையும் தேவதிரவிய அனுமானங்களில் அவரது எல்லையற்ற அன்பின் தொடர்பாடலையும் பறைசாற்றுவதே எல்லாக் குருக்களதும் பிரதான கடப்பாடாகும். இறைவார்த்தையால் அழைக்கப்பட்டு, ஒன்றுகூட்டப்பட்ட திருச்சபை தோழமையின் அடையாளமும், கருவியுமாகும். இயேசுவில், இயேசுவுடன் இத்தோழமையைக் கட்டியெழுப்பவே ஒவ்வொரு குருவும் அழைக்கப்பட்டுள்ளார். இதுவே குருவானவரின் பணித்துறையின் வசிகரமும் அதியுயர் மேன்மையுமாகும். அது திருத்தூதர் பவுல் அடிகளாரினால் எழுப்பப்பட்ட சவாலுக்குச் சிறப்பான வழியில் பதிலிறுக்கிறது. "ஏனெனில் அவர் மீது நம்பிக்கை கொண்டோர் வெட்கத்திற்கு உள்ளாக மாட்டார்" என்பது



மறைநூல் கூற்று. "ஆண்டவரின் திருப்பெயரை அறிக்கையிட்டு மன்றாடுகிற எவரும் மீட்புப் பெறுவர். ஆனால் அவர் மீது நம்பிக்கை கொண்டிருந்தாலன்றி அவர்கள் எவ்வாறு அவரை நோக்கி மன்றாடுவார்கள்? தாங்கள் கேள்வியுறாத ஒருவர் மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள்? அறிவிக்கப்படாத ஒன்று பற்றி அவர்கள் எவ்வாறு கேள்வியுறுவார்கள்? அனுப்பப்படாமல் அவர்கள் எவ்வாறு அறிவிப்பார்கள்?" (உரோம 10:11,13-15)

இளைய தலைமுறையினரை மிகவும் உணர்வுபூர்வமாகக் கவர்ந்து நிற்கும் இன்றைய கலாசார நுகர்வுகளுக்கு மத்தியில் இத்தகைய சவால்களுக்குத் திருப்தியாக பதிலிறுப்பதற்கு நவீன தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது அத்தியாவசியமாகின்றது. "டிஜிற்றல் தொடர்பாடல் உலகமானது அதனது எல்லையற்ற கொள்திறன்களுடன் நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு" (1கொரி 9:16) எனும் தூய பவுல் அடிகளாரின் குரலொலியை நாம் திறனாய்வு செய்ய எம்மை அழைத்து நிற்கிறது. இறைவார்த்தையை அறிவிக்க அழைக்கப்பட்டவர்கள் பாரிய பொறுப்பினையும் தமது பணியில் அதிகளவு கவனக்குறிப்பும் வினைத்திறனும் வலிந்து ஈர்ப்புக் கொண்டவர்களாகவும் விளங்கவேண்டும் என்பதை அதிகரித்துச் செல்லும் புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாடானது குறித்து நிற்கின்றது. நவயுகத்தின் நுழைவாயிலில் குருக்கள் இன்று நின்றுகொண்டிருக்கிறார்கள். விரிந்து பரந்த எல்லையில் ஆழ்ந்த உறவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வடிவங்களை புதிய தொழில்நுட்பங்கள் படைத்து நிற்பதனால் இறைவார்த்தை பரப்புப் பணியில் ஊடகங்களை முன்னரில்லதவாறு மிகவும் திறமையாகக் கையாண்டு பதிலளிக்கவேண்டிய நிலையில் குருக்கள் உள்ளனர். பல்லூடகத் (Multimedia) தொடர்பாடலின் பரம்பலும் அதன் அதிகரித்த அளவிலான (Menu of Option) வலையமைப்பினுள் இலகுவாக நுழைவதையோ அன்றேல் இடைவெளி ஒன்றினை நிரப்புவதனால் அதனைப் பார்ப்பதையோ இலகுவாக்கும் என நம்மை எண்ணவைக்கும் டிஜிற்றல் சந்தையின் துணைகொண்டு பல்வேறு தொனிகளில் தம்மை அதிகரித்த அளவில் வெளிப்படுத்தும் சமூகங்களின் தலைவர்கள் எனும் தமது பொருத்தமான பங்கினை வெளிப்படுத்தி, மறை பரப்பின் நம்பிக்கைமிகு சாட்சிகளாக இன்றைய டிஜிற்றல் தொடர்பாடல் உலகின் குருக்கள் விளங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர். பாரம்பரியமான அம்சங்களுடன் மிகவும் நவீனமான கட்புலன், செவிப்புலன் சாதனங்களையும் (Images, Videos, Animated Features, Blogs, Websites) துணைகொண்டு தூதுரைக்கவேண்டிய சவாலுக்குக் குருக்கள் உள்ளாகின்றனர். இவை மறைக்கல்வி, மறை பரப்புதல், கலந்துரையாடல் போன்றவற்றுக்கான பரந்தளவிலான நவீன காட்சி வசதியை உருவாக்கும். குருக்கள் தங்களது உருவாக்கல் காலத்திலிருந்தே இறைவனுடனான உறுதியான உரையாடலில் அடித்தளமிடப்பட்ட வலிமைமிகு குருத்துவ ஆன்மீகத்தின் பிரதிபலிப்பு, சிறந்த இறையியல் உள்ளறிவு போன்றவற்றுடன் ஒருங்கிணைந்த வகையில் இத்தொழிநுட்பங்களினை பொருத்தமாகவும், திறமையாகவும் கையாளக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஊடகங்களில் பணிபுரியும் நல்மனம் கொண்ட ஆண்களும், பெண்களும் எதிர்ப்பாற்றலின் புதிய வடிவங்கள், மனிதத்தைப் பேணுதல், தனி மனிதர்கள் மற்றும் அவர்களது உண்மையான ஆன்மீகத் தேவைகள் போன்றன தொடர்பாக புதிய பாதை சமைக்கவேண்டிய விசேட கடமைப்பாடு உடையவர்களாக உள்ளனர்.

இவ்வாறாக அவர்கள் டிஜிற்றல் யுகத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் கடவுளின் பிரசன்னத்தை உணரச் செய்யவும், முழு மனித அபிவிருத்தியை வளர்த்தெடுக்கின்றதும், இரட்சணியத்தை வருவிக்கின்றதுமான இறைவார்த்தைக்கு அண்மித்ததாக அவர்களைக் கவர்ந்திழுக்கவும் உதவி புரிய முடியும். அத்துடன் கடவுள் எமது காலம் உட்பட எக்காலத்திலும் நிலையான இடத்தைக் கொண்டுள்ளார் என்பதைக் காட்டவும் முடியும்.

டிஜிற்றல் தொடர்பாடல் உலகில் மேய்ப்புப் பணி பிரசன்னம் மிகவும் துல்லியமானது. அது ஏனைய சமயங்களைப் பின்பற்றுபவர்கள், நம்பிக்கையற்றவர்கள், ஒவ்வொரு கலாசாரத்தைக் கொண்ட மக்கள் போன்றவர்களுடன் எம்மைத் தொடர்புறுத்துகிறது.

பரந்த டிஜிற்றல் உலகும் நவீன தொழில்நுட்பங்களின் அபிவிருத்தியும் மனித குலத்திற்கும் தனிமனிதனுக்கும் பெரும் வளம் ஒன்றின் சின்னமாக உருப்படுத்தி நிற்கிறது. இது கலந்துரையாடலுக்கும் எதிர் செயலாற்றுகைக்குமான ஒரு தூண்டியாக செயற்பட முடியும். இவ்வாறே நம்பிக்கையாளர்களுக்கான ஒரு பெரும் வாய்ப்பாகவும் இது விளங்குகிறது. உயிர்த்த இயேசுவின் நாமத்தில் ஏனையவர்களுக்கு அண்மையில் கொண்டு செல்லப்படுவதற்காகவே தம்மை அர்ப்பணித்தவர்களுக்கு எக்கதவுகளும் மூடப்படலாகாது. குருக்களுக்கு, குறிப்பாக இப்புதிய ஊடகமானது புத்தம் புதியதும், அடைய முடியாதுமான மேய்ப்புப்பணி வாய்ப்புகளை வழங்கி நிற்கிறது. திருச்சபையின் உலகளாவிய திட்டங்களை உள்வாங்கிக்கொள்ள அவர்களை ஊக்கப்படுத்துகின்றது. உண்மையானதும் பரந்துமான சீடத்துவத்தைக் கட்டியெழுப்ப உதவுகிறது. எமது மீட்புக்காக எம்மைத் தேடி வந்த நித்திய குமாரன் இயேசுவின் மறையினைக் கேட்பதனால் கிடைக்கும் புதுவாழ்வுக்கு இன்றைய உலகில் சாட்சியாக விளங்க வழிசமைக்கிறது.

எனது அன்பார்ந்த சகோதர குருக்களே! நவீன தொடர்பாடல்களின் தனித்துவமான சாத்தியப்பாடுகளினை அறிவுநுட்பமாக பயன்படுத்துவதற்கான எனது அழைப்பினை நான் புதுப்பித்துக் கொள்கிறேன். நடைமுறை ஊடகங்கள் தோற்றுவிக்கும் புதிய அரங்கில் ஆர்வமிகு இறைவார்த்தை பறைசாற்றுபவர்களாக உங்கள் அனைவரையும் இறைவன் மாற்றுவாராக.

இந்நம்பிக்கையில் தேவதாயாரின் பாதுகாவலையும் திருத்தூதர்களின் ஆசியையும் அன்புடன் வழிபட்டு வேண்டிக்கொள்வதுடன் எனது அப்போஸ்தலிக்க ஆசீர்வாதத்தையும் உங்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கிநிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈழத்தை அளந்த புனிதன்
## (யோசேவ் வாஸ்)

குறுங்காவியம்



12

**செண்பகக்குழல்வாய்மொழி**

(வேறு)

### எல்லை தாண்டிய இறைபணி

மழையது பொழிந்தகாலை
மலையெலாம் குளிரலாச்சு
நிலமது சிலிர்த்துவிண்ணை
நிறைவுடன் தொழவுமாச்சு
களையினை இழந்துநின்ற
காடுடன் களனியாவும்
விளைந்துநா மெழுவோமென்று
வீறுடன் உளறலாச்சு

புதிதெனப் புனிதர்வாழ்வில்
புலர்ந்ததோர் திருப்பம்மழையால்
மாதவ முனிவன்மீது
மன்னனும் மதிப்புமுற்றான்
அதிசயம் நிகழ்த்தவல்ல
இவரருங் குரவரென்று
விதிகளைத் தளர்த்திமேலும்
சலுகைகள் அவர்க்களித்தான்

மன்னனோ விமலதர்மன்
மனதெலாம் நிறைந்துமேலும்
அன்னவர் தனையழைத்து
அகமெலாம் மலர்ந்துஇன்னும்
தன்னிலை மறந்துமெல்லப்
படிநிலை இறங்கிக்கண்டி
எல்லையைத் தாண்டி நீவிர்
இறைபணி புரிகவென்றான்

அக்கணம் புனிதர்நெஞ்சில்
எழுந்தஅவ் வுணர்வுதன்னை
எங்ஙனம் எடுத்துரைக்க
அதற்குஎன் அறிவுபோதா
தக்கவர் விண்ணைநோக்கித்
தம்மிரு கரத்தைவானின்
பக்கமாய் நீட்டித்தந்தை
பரமனைத் தோத்தரித்தார்

முன்னொரு போதுமந்த
மண்ணிலே மனிதர்யாரும்
பெற்றிடாப் பேறுதன்னை
நம்தவ முனிவர்பெற்றார்
மன்னவன் வாசஞ்சென்றே
மதியுரை புகட்டவல்ல
இன்னொரு மனிதராக
இவரரும் பேறுபெற்றார்

அரசனின் மதிப்புமிக்க
ஒருவராய் உயர்ந்துகண்டிக்
களத்தினைத் தனதாயாக்கித்
தனியொரு குருவாய்நின்று
பரமனாம் யேசுதன்னைப்
பட்டிகள் தோறுங்கொண்டு
பரப்பிட முடிந்தஅந்தச்
செயலது புதுமைதானே

கண்டியின் மன்னனெங்கள்
புனிதர்மேல் கொண்டஅன்பு
அன்னவன் மறைவின்பின்னும்
அவிந்திடக் கண்டோமில்லை
பின்னவன் மைந்தன்தானும்
சளைத்தவ னில்லையென்று
எண்ணருஞ் செயல்கள்மூலம்
உணர்த்தினான் அதிலிதொன்று

புனிதரைப் புதைத்தபூமி
கண்டியே அல்லகோவா
என்றொரு புரளிதன்னை
முளையிலே கிள்ளிப்போட
'நரேந்திர சிம்மன்'கண்டி
மன்னனின் புதல்வன்முனிவர்
கல்லறை திறந்துகாட்டிக்
கசடினைப் போக்கிவைத்தன்

ஒருபெரும் மர்மம்நீங்கி(ய)
உணர்விலே கண்டிமக்கள்
மாபெரும் விசுவாசத்தின்
சாட்சியாய்க் கண்டிமன்னன்
தனியொரு மனிதன்தன்னால்
இறைவனைச் சாட்சிவைத்து
விதியினை வென்றுகாட்ட
முடிந்ததற் கிதுவோர்காட்சி

– வளரும் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அறிமுகம்

விசேடித்த சமூகக் குழுக்களினால் பன்மைத்துவமானதும் பரந்துபட்டதுமான மக்கள் திரளுக்கு (அவர்கள் கேட்குனர், பார்வையாளர், வாசகர், இணையத்தளப் பாவனையாளர் என்று பல திறதித்தினராக அமையலாம்) தகவல்களைப் பறிமாறுவதற்காகப் பயன்படுத்தப்படும் முறைகளும் அமைப்புகளுமே வெகுசனத் தொடர்பு சாதனங்கள் (Mass Media) எனலாம்.

எவ்வாறாயினும் இருபத்தியோராம் நூற்றாண்டின் இன்றைய சமகாலத்தில் நாம் மேலே குறிப்பிட்ட வரைவிலக்கணத்தை மாற்றியமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. உலகமயவாக்கம், நுகர்வுக் கலாசாரம், நகரமயவாக்கம் என்பன காரணமாகவும் நவீன தொழில்நுட்ப முறைமைகளின் அசுர வளர்ச்சி காரணமாகவும் இன்று ஊடகங்களின் போக்கும் அவற்றின் சமூகத் தாக்கமும் மாற்றமுற்று வருகின்றன.

மனிதகுல வரலாற்றில் மொழியின் கண்டுபிடிப்பு பாரிய பாய்ச்சலை ஏற்படுத்தியது எனில், அச்சு முறைமையின் கண்டுபிடிப்பு, வானொலி, தொலைக்காட்சி, முதலான இலத்திரனியல் ஊடகங்களின் கண்டுபிடிப்பு என்பன இன்னும் பல்வேறுபட்ட சமூக மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளதாக ஆய்வாளர்கள் கருத்துரைப்பர்.

## ஊடகங்களின் மூலமான சமூகத் தாக்கங்கள்

மார்சல் மக்லுகான் (Marshall McLuhan) என்னும் கனடியச் சமூகவியலாளர் தொடர்பாடற்றுறை சார்ந்த விருத்திகளானவை மனித சமூக மாற்றத்தின் பிரதான சக்தியாக அல்லது வலுவாகத் தொழிற்படவேண்டும் என்று பரிந்துரைக்கிறார். (1964)

எனினும் இன்று மாறிவரும் உலகில் ஊடகங்கள் இருபக்க விளைவுகளையும் கொண்டுள்ளன என்பதனை நாம் மறுப்பதற்கு இல்லை.

குறிப்பாக மாணவ சமூகத்தினர், இளைஞர்கள், துறைசார் நிபுணர்களுக்கு நவீன தொழில்நுட்ப ஊடகங்கள் பாரிய வரப்பிரசாதமாக அமைகின்றன என்பதனை ஏற்றுக்கொண்டாகவேண்டும். கணினிமய உலகம், தகவல் மைய உலகம் என்று அழைக்கப்படும் உலகில் நவீன தொழில்நுட்பத் தேர்ச்சியினின்றும் நாம் ஒதுங்கி வாழ முடியாது.

கணினி, இணையத்தள வலைத்தளம், மின்னஞ்சல், வலைப் பூக்கள் (Blocks), மின் நூல் (e-Books), மின்னியல் தகவல் மூலங்கள் (e - sources) ஆகியன எமது சமூகத்தில் தொடர்பாடல் வேகத்தை அதிகரித்திருப்பதோடு, தொடர்பாடல் முறைமையினையும் இலகுபடுத்தியுள்ளது. ஓரிடத்தில் இருந்தவாறே






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சில மணித்துளிகளில் உலகையே வலம் வருகின்ற வாய்ப்புண்டு.

**நவீன தொடர்புசாதனங்களின் இருபக்க விளைவுகள்**

**அநுகூலங்கள்**

01. நேரச் சுருக்கம் / விரைவு
02. நாடுகடந்த சர்வதேசத் தொடர்பாடலின் வியாபகம்.
03. புதிய படைப்பாளிகளின் உருவாக்கம்.
04. சமூக இடைவினையின் அதிகரிப்பு.

**பிரதிகூலங்கள்**

01. ஆபசமான காட்சிகள் / இலக்கியங்களின் பரவல்.
02. குடும்ப, சமூக உறவில், நெருக்கத்தில் விரிசல்.
03. பொய்யான, போலியான, தனிப்பட்ட தாக்குதல்கள்.
04. சமூகநலம், உளநலம், ஆன்மீகநலம் ஆகியவற்றில் எதிர்மறையான பாதிப்பு.
05. எல்லை கடந்த தகவல்களின் பரம்பல் மூல மாக ஏற்படும் படைப்புத் திறன் குன்றுதல்.
06. "சைபர் கிரைம்" (Cyber Crime) எனப்படும் குற்றச் செயல்களின் அதிகரிப்பு.

**நேர்நிலைப்படுத்தலும் சீர்மைப்படுத்தலும்**

விழுமியக் கல்வியின் வீழ்ச்சியே இன்றைய சமூகப் பிறழ்வுகள், சமூக வன்முறைகளுக்குக் காரணமாகக் கூறப்படுகிறது. எனவே, அனைத்துச் சாதனங்களும் மானிட சௌகரியம், மனிதகுல முன்னேற்றம் என்பன கருதியே விஞ்ஞானிகளால் இவ்வுலகில் கண்டறியப்பட்டன. எனினும் அவற்றைப் பயன்படுத்தும் முறையிலும், நோக்கிலும் எதிர்மறை நோக்கங்கள், தவறான இலக்குகள் பின்னணியில் இருக்குமெனின் மோசமான சமூக விளைவுகளையே சந்திக்க நேரிடும்.


எனவே, மனித விழுமியம், சீர்மியம் என்றெல்லாம் உரத்துப் பேசப்படுகின்ற இக்காலகட்டத்தில் நவீன தொழில்நுட்பம், நவீன ஊடகசாதனங்களின் பயன்பாடு என்பன தொடர்பிலும் நாம் மீளவும் நிதானமாகச் சிந்திக்கவேண்டிய நிலைமைக்கு உள்ளாகி இருக்கின்றோம்.

மகிழ்வளிக்கை, பொழுதுபோக்கு என்பன வேண்டிய அம்சங்களே. ஆயின் அவையே முற்றுமுழுதாக ஆக்கிரமித்துக் கொள்வதென்பது ஏற்புடைமை ஆகாது.

**முடிவுரை**

"நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நமது வாழ்வை மேம்படுத்துவோம்" என்ற மகுட வாசகத்தின் கீழ் உலகத் தொடர்புதின விழா - 2010ஐ இம்முறை கொண்டாடும் சமூகத் தொடர்பு நிலையம் நல்லதொரு சிந்தனையை முன்வைத்துள்ளது. திருத்தந்தை விடுத்திருக்கும் கருப்பொருள் சார்ந்த செய்தி ஊடக உலகைச் சார்ந்தோர், ஊடக நுகர்வோர், சமயப் பெரியார், பெற்றார், சட்டத் துறையினர், செய்தியாளர்கள் என்று பல திறத்தினரும் எதிர்கால நலன் கருதி, மனித விழுமிய அடிப்படையில், மனித குலத்துக்கு உகந்ததும், தர்மம் மிக்கதுமான ஒரு புதிய ஊடக நெறிமுறையினையும் நவீன தொழில்நுட்பம் சார்ந்த வரம்பினையும் நமக்கு நாமே ஏற்படுத்திக்கொள்ளவேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது எனலாம்.

**- சந்திரசேகரன் சசிதரன் -**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




இந்த ஆகஸ்ட் மாதம் திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டம் தனது தொடர்புசாதன தினத்தை அனுட்டிக்கின்றது. எனவே இலக்கிய மஞ்சரியிலும் அது தொடர்பாக சற்று ஆராய்வோம். முனைவர் எஸ்.சிறிகுமார், முனைவர் என்.கிருஷ்ணன் ஆகியோர் எழுதிய 'இதழியல் நுணுக்கங்கள்' என்னும் நூலிலிருந்து ஒரு பகுதியைப் பார்ப்போம்.

## இதழியல்

மனிதன் மொழியைப் படைத்துப் பேசத் தொடங்கிய பின்பு செய்தித் தொடர்பிற்கென வாயில்கள் பல படைத்தான். சைகைகள் காட்டியும் கூவியழைத்தும், சீழ்க்கை, சங்கு, மணி போன்றவற்றை ஒலித்தும், பறைகளை அறைந்தும் செய்திகளை அறிவித்தான். இம்முறைகள் அண்மை இடங்களுக்கு செய்தியறிவிக்கப் பயன்பட்டனவேயன்றி தொலைவில் உள்ள இடங்களுக்கு அறிவிக்க இயலவில்லை. யானை மீதமர்ந்து முரசறைந்தும், குதிரை ஏறிச் சென்று செய்திகளைப் பரப்புவதும் மேட்டுக் குடியினருக்கு மட்டுமே கிட்டிய வாய்ப்பாக இருந்தது. அனைத்து இடங்களிலிருந்தும் செய்திகளை அனைவரும் அறியும் வாய்ப்பு செய்தித்தாள்கள் வந்த பிறகே கிடைத்தது.

செய்தித்தாள்களின் பணியை புரட்சிக் கவிஞன் பாரதிதாசன்

**காரிருள் அகத்தில் நல்ல**
**கதிரொளி நீதான்! இந்தப்**
**பாரிடைத் துயில்வோர் கண்ணிற்**
**பாய்ந்திடும் எழுச்சி நீதான்**
**ஊரினை நாட்டை இந்த**
**உலகினை ஒன்று சேர்க்கப்**
**பேரறி வாளர் நெஞ்சில்**
**பிறந்த பத்திரிகைப் பெண்ணே**

எனப் பாராட்டி மகிழ்வார். மேலும்

**ஏற்றமுறச் செய்வதும்**
**மாற்றமுறச் செய்வதும்**
**ஏடேயாகும்**

எனவும் செய்தித்தாள்களின் பணிகளையும், பெருமைகளையும் பகர்வார் பாவேந்தர் பாரதிதாசன்.

## இதழியல் - சொல் விளக்கம்

இதழ்கள் நாடு, இனம், மொழி ஆகியவற்றால் எழுப்பிய பந்தலிலே படரும் கொடிகளாகும். ஜேர்னலிசம் (Journalism) என்ற ஆங்கலச் சொல்லின் தமிழாக்கம் இதழியல். டையர்னல் (Diurnal) என்ற பழைய லத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பிறந்தது என்பர். சர்னல், டையர்னல் என்றால் 'அன்று' என்று பொருள். 'சர்னல்' என்றால் அன்றாடம் நடந்ததை எழுதி வைக்கும் ஏடு என்று பொருள்படும். வாஸ்கொடகாமாவின் பயண நூல் 'எ சர்னல் ஆஃப் தி பஸ்டு வாயேஜ் ஆஃப் வாஸ்கொடகாமா' என்று பெயரிடப்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது 'சர்னல்' என்றால் இழ்களையே குறிக்கிறது என்பார் அ.மா.சாமி

இதழ் என்பதை பத்திரிகை, செய்தித்தாள், நாளிதழ், தாளிகை என்றும் குறிப்பிடுவர்.

இதழியல் என்ற சொல்லின் பொருள் காலப் போக்கிற்கும், கருத்து வளர்ச்சிக்கும், அறிவியல் முன்னேற்றத்திற்கும் ஏற்ற நிலையில் மாறிக்கொண்டே வருகிறது.

மனிதனின் அறிவு வளர வளர தன்னைச் சுற்றியிருப்பவர்களையும், அவர்கள் செய்யும் செயல்களையும் அறிய ஆவல் கொண்டான். மொழியறிவு இல்லாதிருந்த காலத்தில் செய்கை மூலமாகவும், மொழியின் பயன்பாடு தெரிந்ததும் பேச்சின் துணையோடு செய்திகளை அறியவும், பரப்பவும் முயன்றான். எழுதக் கற்றதும், அச்சுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பொறிக் கண்டுபிடிப்பும் செய்திகளின் பரப்பை அதிகரிக்கச் செய்தன.

செய்திகளைப் பெறுவதும், பிறருக்குத் தருவதும் ஆகிய கலையே இதழியல் என்றனர்.

பொதுமக்களின் எண்ணங்களை, வாழ்வியல் செய்திகளைப் பிரதிபலிப்பது இதழியல்.

இதழ்களுக்கும், குறிப்பாக செய்தித்தாள்களுக்கும் எழுதும் தொழிலைத்தான் முதன் முதலில் இதழியல் என்ற சொல் குறித்தது. இப்பொழுது அதனுடைய பொருளும் பரப்பும் விரிவடைந்து செய்திகளையும் கருத்துகளையும் பரப்புகின்ற மக்கள் தொடர்பு நிறுவனமாக மாறியும், சமுதாய விழிப்புணர்ச்சியின் ஓர் உறுப்பாக அதுவே உருவெடுத்தும், அதனுடைய நடவடிக்கைக்கு அற அடிப்படையிலும் சட்ட நோக்கிலும் பொறுப்பேற்கும் அமைப்பாகவும் இதழியல் திகழ்கிறது என்பார் ஆர்.இராமச்சந்திர ஐயர். "இதழியல் சமுதாய தகவல் தொடர்பு சாதனங்களில் ஒன்றாக அமைகிறது. இது முறையாகவும், நம்பிக்கை ஊட்டும் வகையிலும் செய்திகளை அறிவித்தல் (Informing) எண்ணங்களைப் பிரதிபலித்தல் (Reflecting) மகிழ்வு தரும் செய்திகளைத் தருதல் (Entertaining) ஆகியவற்றைச் செய்கிறது" என்று ரோலண்ட் உல்ஸ்லே கூறுகின்றார்.

வெப்ஸ்டர் "வெளியிடுவதற்காகவோ, பதிப்பிப்பதற்காகவோ, ஒலிபரப்புவதற்காகவோ நடைமுறை ஈடுபாடுள்ள விபரங்களைத் தொகுப்பதும், எழுதுவதும், செப்பனிடுவதும் இதழியல்" என்று விளக்கமளிப்பார். "அவசரத்தில் பிறக்கும் இலக்கியமே இதழியல்" என்பார் மாத்யூ அர்னால்டு.

சேம்பரின் இருபதாம் நூற்றாண்டு அகராதி "பொது இதழ்களுக்கு எழுதுதல், அவற்றை நடத்துதல் ஆகிய தொழிலே இதழியல்" என்று கூறுகிறது. "ஆக்கப் பணிகளை விளைவிக்க உதவும் வலிமை வாய்ந்த கருவியே இதழியல். பொதுமக்கள் தொடர்புக்குரிய புதிய சாதனங்களைப் பயன்படுத்தி பொதுச் செய்திகளையும், பொதுக் கருத்துகளையும் பொதுப் பொழுதுபோக்குகளையும் முறையாக, நம்பிக்கைக்குரிய வகையில் பரப்புவதாகும்" என்று ஜி.எ:.ப்.மோட் கூறுகிறார். லார்டு கிரே "பத்திரிகைகள்தாம் நாட்டுச் சுதந்திரத்தின் நடைபாதைகள்" என்பார்.

"பொதுநோக்குடைய இதழியல் துறை ஓர் ஆற்றல் மிக்கக் கருவியாகும். அதன் மூலம்தான் இன்றைய சமுதாயம் அதனுடைய வழிகளை வகுத்துக்கொண்டும் மாற்றிக்கொண்டும் தெளிவாக வரையறுக்கப்பெற்ற வளரும் மனித நலன் என்னும் இலட்சியத்தை நோக்கி நடை பயில்கிறது" என்று குறிப்பிடுகிறார் ஹறால்டு பெஞ்சமின் பிராங்மோரஸ். "பெரும்பாலும் ஒரு நாளிதழ் அறிவிப்பதும் கருதுவதும்தான் வரலாற்றுக்கு மூலப் பொருளாகவும், வரலாற்று ஆசிரியர்களுக்கு மிகவும் மதிப்புடையதாகவும் அமைகின்றது" என்று இதழியலின் சிறப்பினை அறிவுறுத்துகின்றார்.

தாமஸ் ஜெபர்சனிடம் ஒரு முறை "நீங்கள் செய்தித்தாள்களே இல்லாத அரசை விரும்புவீர்களா? அல்லது அரசே இல்லாத செய்தித்தாள்களை விரும்புவீர்களா?" என்று கேட்டதற்கு அவர் "அரசே இல்லாத செய்தித்தாள்களையே விரும்புவேன்" என்று பதிலளித்தார். இதிலிருந்து செய்தித்தாள்களுக்கு இருக்கும் முக்கியத்துவம் தெரியவருகிறது.

## இதழியலின் குறிக்கோள்

இதழ்கள் சிறந்த குறிக்கோள்களோடு செயல்படவேண்டும். மக்களுக்குத் தொண்டு செய்யும் நோக்கமின்றி, வெறும் ஆதாய நோக்கத்தோடு செயல்படும் இதழ்களால் சமுதாயத்திற்குக் கிடைக்கும் பலன்களைவிட கேடுகளே மிகுதியாக இருக்கும்.



## குறும்(புப்)பா - 43

ஆசையினா லரைப்பதுவும் வாய்தான்
அளவின்றி அள்ளுவதும் வாய்தான்
ஓசையின்றி உள்ளேறும் நோய்களை நசித்துவிட
வாயை வசப்படுத்துங் கள்

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மகாத்மா காந்தியடிகள் தமது சுயசரிதையில் "செய்தித்தாளின் நோக்கங்களில் ஒன்றாக, மக்களின் உணர்வினை அறிந்து, அதனை வெளியிடுவதாக இருக்கவேண்டும். மற்றொன்று, மக்களிடம் மிகவும் வேண்டிய உணர்வுபூர்வமான எண்ணங்களை உருவாக்கவேண்டும். இன்னொன்றாக, பொதுமக்களிடம் இருக்கும் குறைகளையும் துணிச்சலாக எடுத்துரைக்கவேண்டும்" என்கிறார்.

இங்கிலாந்தின் பத்திரிகை மன்றம் தனது இரண்டாவது ஆண்டறிக்கையில் "அநீதியை வெளிக்காட்டுவது, தவறைத் திருத்துவது, ஆலோசனை வழங்குவது, நண்பர்களில்லாதவரோடு நட்புக்கொள்வது, ஆதரவற்றவர்களுக்கு உதவுவது ஆகியவை செய்தித்தாள்கள் செய்யவேண்டிய சேவைகளுள் அடங்கும். வேறு வகைகளில் பெறமுடியாதவர்களுக்குத் தொடர்ந்து உதவிகளை வழங்கவேண்டும். பொதுக் காரணங்களை எடுத்துக்கொண்டு தேவையானால் போராட்டங்கள் நடத்தவும்வேண்டும் என்று விளக்குகிறது. இதழியலானது சமுதாயத்தைப் பிரதிபலித்து மக்களுக்குக் காட்டவேண்டும். நல்லது கெட்டது இரண்டினையும் எடுத்துரைத்து மக்களும் நாடும் செழுமையுற்று விளங்கப் பணியாற்றுவதே இதழியலின் முக்கியக் குறிக்கோளாகும்.

## கடுகுக் கதை 25

# ஞானோதயம்

லெனின் ஒரு வாரத்திற்கான லீவு விண்ணப்பப் பத்திரத்தை அன்ரனிடம் கொடுத்தார். அன்ரனுக்கு ஆச்சரியமாய்ப் போய்விட்டது. லீவே எடுக்காத மனிதன் ஒரு வாரம் விடுப்புக் கேட்டால் ஆச்சரியம் வராமலா போகும்.

"என்னப்பா ஆச்சரியமாய் இருக்கே?" என்று அன்ரன் லெனினிடம் கேட்டார்.

"எனக்கு ஞானோதயம் வந்திட்டுது சேர் கண்ணன் அருச்சுனனுக்கு கதை சொன்னது போல என்ர சின்ன மகள் எனக்குப் புதிய கீதை சொல்லிப் போட்டாள்"

"என்னப்பா நடந்தது?"

• • •

சின்னவள் தகப்பனிடம் ஒரு கேள்வி கேட்டாள்.

"அப்பா உங்கட ஒருநாள் சம்பளம் என்ன?"

"என்னத்துக்கு கேக்கிறா மகள்?"

"முதல்ல சொல்லுங்க"

"ஐநூறு ரூபா"

"சரியப்பா... என்னட்ட முன்னூறு ரூபா சேத்து வச்ச காசு இருக்கு... நான் அம்மம்மா பென்சன் எடுத்த பிறகு இருநூறு ரூபா வாங்கி உங்களிட்ட ஐநூறு ரூபா தாறன். என்னோட ஒருநாள் முழுக்க நில்லுங்களேன்"

லெனினுக்கு முகத்தில் அறைந்ததுபோல் இருந்தது. ஐந்து நாளும் அலுவலக வேலை; சனிக்கிழமை கடையில கணக்கெழுதும் கடமை; ஞாயிறு கோயில், கூட்டம் அது இது என்று பல



சோலிகள். வீட்டுக்குப் போக இரவு எட்டு மணியாகிவிடும்.

"அடக்கடவுளே! இந்தப் பிள்ளைக்கு எவ்வளவு ஏக்கம்... இப்படியொரு பக்கம் இருப்பதை நினைத்துக்கூடப் பார்க்கவில்லையே" அதிர்ச்சியில் உறைந்து போனான் லெனின்

• • •

மறுபேச்சுப் பேசாமல் லெனினின் லீவு விண்ணப்பத்தில் கையொப்பமிட்டார் அன்ரன்.

அன்ரனும் வியந்துபோனார். தானும் இரண்டு நாள் லீவு எடுத்து பிள்ளைகளின் ஆவணி விடுமுறையில் அவர்களுடன் நிற்கவேண்டும் என்று முடிவு செய்துகொண்டார்.

– பர்ரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புனித அன்னை தெரேசா




அன்னை தெரேசா 1910ம் ஆண்டு ஆகஸ்ட் 26ல் யூகோஸ்லாவாக்கியாவில் ஸகாட்ஜே நகரில் பிறந்தார். உலக மக்களால் அன்னை தெரேசா என்று அன்புடன் அழைக்கப்படும் புனிதை பதினெட்டு வயதில் யூகோஸ்லாவியாவை விட்டுப் புறப்பட்டு 1929 ஜனவரி 6ம் திகதி கல்கத்தாவில் வந்து இறங்கினார். 1997 செப்டம்பர் 5ம் திகதிவரை 58 ஆண்டுகள் உலக மக்களுக்காக அவர் ஆற்றிய விலைமதிப்பில்லாத, தன்னலமற்ற, ஏழ்மை வாழ்வுடன் இணைந்த அறப்பணி நம் அனைவருக்கும் ஒரு முன்மாதிரிகையாகவும் முன்னோடியாகவும் விளங்குகிறது என்றால் அது மிகையாகாது.

கல்விப்பணியில் அவரது வாழ்க்கை தொடங்கியது. புனித மரியாள் கல்லூரியில் 17 ஆண்டுகள் ஆசிரியராகவும் அதிபராகவும் மேன்மையான பணியாற்றினார். எனினும், அவரது மனமோ கல்கத்தா சேரிப் பகுதிகளில் கந்தை உடையுடன் கலங்கும் ஏழைச் சிறார்களை எழுச்சிப் பாதையில் எடுத்துச் செல்லவே தூண்டியது. 1948ம் ஆண்டு மோட்டிஜின் சேரிப் பகுதியில் ஐந்து ரூபாய் மூலதனத்துடன் சென்று பணியை ஆரம்பித்தார். 1950களில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் 'அன்பின் பணியாளர்' சபையை உருவாக்கினார்.

அனாதைகளாகக் கைவிடப்பட்டுக் கலங்கி மனமுடைந்து இறக்கும் ஏழைகளைக் கண்டு ஏங்கினார். சாக்கடை ஓரங்களிலும், பிளாட்பார மேடைகளிலும் வீழ்ந்து கிடக்கும் ஏழைகள் சாகும்போது அன்பில் திளைத்து அமைதியாக இறக்கவேண்டும் என விரும்பினார்.

அவரது விருப்பம் விருட்சமானது. "இறப்போர் நல இல்லம்" அன்னையால் ஆரம்பிக்கப்பட்டது. மிகக் கொடிய நோயான தொழுநோயாளர்களை ஆதரிக்கவும் அன்பு செய்யவுமென்று உருவாக்கியதுதான் "தொழுநோயாளர்கள் இல்லம்".

அவரது பணி பரந்து விரிந்தபோது கைவிடப்பட்ட அரும்புகள் மீதும் அவரது கருணை மழை பொழிந்தது. அன்னைத் தெரேசா, "குழந்தைகள் காப்பகம்" பிறக்க அடிகோலினார். கல்கத்தா மக்களுக்கு அவர் செய்த தொண்டு பின்னர் இந்தியா முழுவதும் பரவியது. பின்பு இச்சேவை உலக நாடுகளைத் தழுவித் தாவியது.

பிற்காலத்தில் அருள்சகோதரர்கள் சபையையும், உடன் உழைப்பாளர் சபையையும் தோற்றுவித்தார். 1965 தொடக்கம் 1970 வரை மூன்று கண்டங்களில் 9 மடங்களை நிறுவினார். 1968ல் உரோமாபுரியிலும் அவரது அருட்பணி ஆரம்பமானது. மொழி கடந்து, மதங் கடந்து, சாதி வேறுபாடின்றி இன்னலுற்ற இதயங்களுக்கு தன்னலமற்ற மனிதநேயப் பணியாற்றிய நடமாடும் தெய்வம் அன்னை தெரேசாதான்.

ஒருநாள் அன்னை தெரேசா வீதியால் வந்துகொண்டிருந்தபோது ஓர் அரச மருத்துவமனைக்கெதிரிலே ஒரு தாய் குற்றுயிருடன் கிடப்பதைக் காண்கிறார். அன்னை தெரேசாவின் அன்பு மனம் அழுதது. வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று சிகிச்சை அளிக்கும்படி வேண்டினார். மருத்துவர்கள் மறுத்துவிட்டார்கள். "செத்துப்போகிற உயிருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எதற்குச் சிகிச்சை?" இது மருத்துவர்களின் வாதம். சிகிச்சை அளித்தே ஆகவேண்டும் என்று பிடிவாதமாகவே இருந்தார் அன்னை. இறுதியில் வைத்தியர்கள் சிகிச்சை அளிக்கவே, அத்தாய் உயிர் பிழைத்தார்.

இந்தியாவில் மோட்டிஜில் சேரியில் ஒரு குடிசையை வாடகைக்கு எடுத்தே இறப்போர் நல இல்லத்தை ஆரம்பித்தார். காலப்போக்கில் இடப்பற்றாக்குறை ஏற்படவே அன்னை தெரேசா அதிகாரிகளின் உதவியுடன் காளிகோவில் அருகில் காலியாகக் கிடந்த இரண்டு தர்மசாலைகளில் சாகும் தறுவாயில் அநாதைகளாக அல்லலுறுவோரைக் கொண்டுவந்து சேர்த்தார். சில வாரங்களில் எதிர்ப்புக் கிளம்பியது. காளிகோவில் அருகில் கர்த்தரின் ஆட்களா? மதப்புரட்சியாளர்கள் கற்களை எறிந்து கூச்சலிட்டார்கள். அவர்கள் ஆவேசமாக ஆர்ப்பரித்தார்கள். உன்னைக் கொன்றுவிடுவோம் என அச்சுறுத்தினார்கள்.

அன்னை தெரேசா அஞ்சவில்லை, "என்னைக் கொல்லவேண்டுமானால் கொன்று விடுங்கள், ஆனால் செத்துக் கொண்டிருப்பவர்களை நிம்மதியாகச் சாகவிடுங்கள்" என்றார். கூட்டம் அமைதியானது. விடயம் அறிந்த உள்ளூர்க் காங்கிரஸ் தலைவர் அன்னையின் மகத்தான மானிட நேயப் பணியை உயர்வாக மதித்தார். தன்னை அழைத்து வந்தோர்க்கு அன்னையின் சேவை மகத்துவத்தை விளங்கப்படுத்தினார். "இதோ, அழுகிக் கிடக்கும் மனிதர்களைச் சுத்தஞ் செய்ய உங்கள் தாயோ, சகோதரிகளோ வரட்டும். அப்படி வந்தால் இவர்களை நான் இடத்தைக் காலிபண்ணச் சொல்கிறேன்" என்றார். அங்கு ஆர்ப்பாட்டம் செய்த கூட்டம் தலைகுனிந்து சென்றது.

பல அரச அதிகாரிகளும் அன்னைக்கு உதவி செய்ய முன்வந்தனர். இன்றும் இப்பணி 35க்கும் மேற்பட்ட நாடுகளில் விழுதுவிட்டு வியாபித்து நறுமணம் வீசுகிறது. இறப்போர் நல இல்லம் சாகும்போது சாந்தி தருகின்றது.

தொழுநோய் கண்டவர்களை குடும்பத்தாரே ஒதுக்கிவிடுவதால் அவர்கள் துர்நாற்றம் வீச வீச ஆதரவற்றவர்களாக கல்கத்தா சாக்கடையோரங்களில் கலங்கிக் கண்ணீர் விட்டார்கள். இவர்களைக் கண்ணுற்ற அன்னை தொழுநோயாளரை அருவருப்பின்றி, முகச்சுழிப்பின்றி சகிப்புத் தன்மையோடு புண்களைக் கழுவி மருந்திட்டு ஆறுதல்படுத்தி அன்புசெய்தார். இவர்களுக்காக இறப்போர் நல இல்லத்தில் ஒரு பகுதியை நிர்மல் ஹிருதய இல்லமாக அமைத்து தொழுநோயாளர்களைப் போசித்தார்.

அப்போது மேற்கு வங்க மாநில முதல்வர் பி.சி.ராய் அவர்களிடம் அன்னை தெரேசா தொழுநோயாளர்களுக்கான தனி இடம் அமைக்க உதவி கோரியதன் பேரில் 34 ஏக்கர் நிலத்தை தொழுநோயாளர்களுக்கான குடியிருப்புகளை அமைப்பதற்காக மேற்கு வங்க அரசு வழங்கியது. அங்கு சாந்தி நகர் தொழுநோயாளர் குடியிருப்பு தோன்றியது. நோய் தீர்ப்பதோடு நின்றுவிடாது அவர்களது மறுவாழ்வுக்காகத் திட்டமிட்டு குடிசைத்



தொழில்களைக் கற்பித்து ஜீவன உபாயத்தையும் தேடிக் கொடுத்தார். பிச்சை புகுந்த நோயாளி வருவாய் பெருக்கும் தொழிலாளி ஆனான். நோய்க் காடாய் இருந்த உடம்பு பூக்காடாய்ப் புத்துணர்வு பெற்றது.

வறுமையின் கொடுமையால் பிள்ளைகளை விற்கும் தாய்மார், தவறான உறவில் மலர்ந்த குப்பைத் தொட்டிக் குழந்தைகள், பெற்றோர் கொடுமை, உறவினர் கொடுமை தாங்காது வீட்டை விட்டு வெளியேறும் சிறார்கள், சிற்றன்னை கொடுமையால் வீதிக்கு வந்த பிள்ளைகள். இவர்களின் அவலநிலை போக்க அன்னை ஆரம்பித்ததுதான் குழந்தைகளுக்கான "நிர்மல் பவன்". 1953 பெப்ரவரி 15ம் திகதி நிர்மல்பவனுக்கு ஒரு ஆண்குழந்தை கொண்டுவரப்பட்டது. இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அன்னை தெரேசா 1958ல் 200 மாணவர்கள் வரை இணைத்தார். 8 வருடகால கல்வி புகட்டலின் பயனாக 14 பாடசாலைகளை நிறுவினார். இதற்காகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களையும் உருவாக்கினார். அநேக ஆசிரியர்கள் அவருக்கு உதவ முன்வந்தார்கள். அவரது 15வது பாடசாலை திறந்த பாடசாலை யாகும். டாப்பா நகரில் இது அமைந்திருந்தது. இப்பாடசாலை சிறப்பாகப் பேசப்பட்டது. இப்பாடசாலையில் அனேக தொழுநோயாளர்களதும், காசநோயாளர்களதும் பிள்ளைகள் கல்விபயிலுகின்றார்கள். அன்னையுடன் இணைந்து செயலாற்ற அனேக பணியாளர்கள் இணைந்தார்கள். இவ்வளவுக்கும் அன்னை தங்கியிருந்து சேவை செய்த இல்லம் சிறு குடிசை வீடுதான். கர்தினால் ஸ்பெல்மன் கல்கத்தா வந்தபோது அன்னையின் இருப்பிடத்தை வந்து பார்த்ததும் மனங்கலங்கினார். இவ்வளவு சிறிய இடத்தில் இருந்துகொண்டு எவ்வளவு பெரிய சேவையைச் செய்கிறீர்கள் என்று வியந்து கல்கத்தா பேராயரைச் சந்தித்து இச்சேவைக் குழுவுக்குப் பெரிய இடத்தைத் தேடித் தரும்படி கேட்டதற்கு இணங்கக் கட்டிடமும் கிடைத்தது. அனேக பணியாளர்களும் சேவை செய்ய முன்வந்து சேர்ந்தார்கள்.

அன்பின் பணியாளர் சபைக் கன்னியர்கள் எளிமையான வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டவர்கள். பிறர்நல சேவையே அவர்களது உயிர் மூச்சு. இன்று உலகம் முழுவதும் இச்சபை வியாபித்துள்ளது. 31 ஆண்டுகளின் பின்பு அமெரிக்கா சென்று லொஸ்வேகஸ் என்ற இடத்தில் பெண்கள் மாநாட்டில் கலந்துகொண்டார். மேலும் சுவிசர்லாந்து, ரோம் நகரம் போன்ற இடங்களுக்குச் சென்று நிதி உதவிகளும் பெற்றார். 1965 பெப்ரவரி முதலாம் திகதி திருத்தந்தை 23ம் அருளப்பர் அன்பின் பணியாளர் சபையை சர்வதேச சபையாக அங்கீகரித்தார்.

அன்னையின் சேவைப் பாதை கல்லும் முள்ளும், புயலும் பூகம்பமும், சவால்களும் சரிவுகளும் நிறைந்தே காணப்பட்டது. நெஞ்சை உருக்கும் சம்பவம் ஒன்று அவரது வாழ்வில் நிகழ்ந்தது. கல்கத்தாவின் தெருக்களில் பணியாளர்களுடன் அன்னை தெரேசா கையேந்தி நிதி சேகரித்துக் கொண்டிருந்தபோது ஒரு பெரிய பணக்காரரது வீட்டுக்கு முன் வந்து



நின்றார். உடல் பொருள் ஆவி ஈந்து அர்ப்பண சிந்தையுடன் சேவை செய்யும் அந்த வெள்ளைப் புறாவின் உள்ளத்தைப் புரிந்துகொள்ளாத அந்தக் கோடீஸ்வரன் முன் கையேந்தி நின்ற அன்னையின் கரத்தில் இலட்சக்கணக்கான நன்கொடைகளைத் தருவதற்குப் பதிலாக ஏளனமாக என்னசெய்தான் தெரியுமா? நீட்டிய கரங்களில் காறி உமிழ்ந்தான். அருகிருந்த கன்னியர் மனங் கலங்கினார்கள்.

அன்னை மனங்கலங்கவில்லை. பொற்காசுகளை நிறைவாகப் பெற்றுக்கொண்ட பூரிப்போடு முகமலர்ந்து எச்சிலோடு தனது கரங்களை மூடிக்கொண்ட அன்னைத் தெரேசா "இந்த எச்சில் எனக்குப் போதும். எனது ஏழைகளுக்கு ஏதாவது கொடுங்கள்" என்று அன்பாகக் கேட்டாராம். இச்சொற்கள் அவர் காதில் விழுமுன் இதயத்தைத் தொட்டது. அவனது ஏளனப் பார்வையில் புதிய வெளிச்சம் பாய்ந்தது. அவன் மனம் நாணிக் கோணியது. அன்னையின் காலில் விழுந்து மன்னிப்புக் கோரினான். வேண்டிய உதவிகளை வாரி வழங்கினான்.

1979ல் அன்னை தெரேசாவுக்கு நோபல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பரிசு கிடைத்தது. 1983ல் அன்னைக்கு முதன் முதல் மாரடைப்பு ஏற்பட்டது. 1997ல் புதிய தலைமைப் பதவி சகோதரி நிர்மலாதேவிக்கு வழங்கப்பட்டது. இவர் இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர். வழக்கறிஞர் பட்டம் பெற்றவர் என்பது குறிபப்பிடத்தக்கது.

1997ல் செப்டம்பர் 5 வெள்ளி அன்று 87 ஆண்டுகள் சேவை மழை பொழிந்த கருணை இதயம் மாரடைப்பால் மரணமானது. 50 நாடுகளின் தலைவர்கள் உட்பட இராணுவ மரியாதையுடன் இலட்சக்கணக்கான மக்கள் கூட்டத்துடன் இறுதி ஊர்வலம் நடந்தது. அன்னை இல்லத்திலேயே அடக்கஞ் செய்யப்பட்டார்கள். சில ஆண்டுகளில் திருத்தந்தை அன்னை தெரேசாவை முத்திப்பேறு பெற்றவர் என அறிவித்தார். அவரது வாழ்க்கை வளர்ந்து வரும் சமூகத்துக்கு வழியும் ஒளியுமாகும்.

## அன்னைத் தெரேசாவுக்குக் கிடைத்த விருதுகள்

**01. 1962 :** இந்தியாவின் பத்மஸ்ரீ விருது, பிலிப்பைன்ஸ் தீவுகளின் மகாசேசே விருது

**02. 1964 :** மும்பை நற்கருணை மாநாட்டில் வெண்ணிற லிங்கன் கார் பரிசு

**03. 1971 :** உலக அமைதிக்கான உத்தமர் தேர்வு (25,000 டொலர்)

**04. 1972 :** ஜவகர்லால் நேரு பரிசு

**05. 1973 :** டெம்பிள்டன் அறக்கட்டளையின் இறையுணர்வு பரப்புதலுக்கான பரிசு

**06. 1974 :** அண்ணல் அசிசி சவேரியார் பரிசு

**07. 1975 :** ஒக்டோபர் 23 – ஜெர்மனியில் ஆல்பட் சுவைட்சர் நினைவுப் பரிசு

**08. 1976 :** விசுவபாரதி பல்கலைக்கழகத்தின் தேசிகோத்தம்மா விருது

**09. 1978 :** பிரிட்டன் தந்த தலைசிறந்த குடிமகள் விருது

**10. 1979 :** பால்சான் அனைத்துலக விருது

**11. 1979 :** நோபல் பரிசு

**12. 1980 :** பாரதரத்தினா விருது (70வது பிறந்த தினம் அன்று இந்திய அரசு அன்னையின் தபால் தலையை வெளியிட்டது.

**13. 1983 :** பிரிட்டிஷ் அரசி எலிசபெத் அளித்த "Bart marach the Order of Merit"

**04. 1992 :** பாரத சிரோமணி விருது (பாரதத்தின் தவப் புதல்வி. ரயிலிலும், விமானத்திலும் இலவசப் பயணச் சலுகை இந்திய அரசு வழங்கியது)

**15. 1993 :** ரஷ்ய அரசு வழங்கிய டால்ஸ்டாய் விருது


**16. 1993 :** ஓகஸ்ட் 20 – ராஜீவ் காந்தியின் பெயரால் நிறுவப்பட்ட சத்பாவனா விருது.

**17. 1993 :** யுனெஸ்கோவின் அமைதிப் பரிசு.

**18. 1995 :** தயாவதி மோடி அறக்கட்டளைப் பரிசு

**19. 1996 :** சர்வதேச நம்பிக்கை ஒற்றுமை விருது

பல்வேறு பல்கலைக்கழகங்கள் வழங்கிய டாக்டர் பட்டங்கள் யாவற்றையும் சபைக்கே அர்ப்பணித்தார் அன்னை தெரேசா. அன்னை தெரேசா போன்று இன்னொரு நடமாடும் தெய்வத்தை இறைவன் பூமியில் பிறக்கவைப்பாரா?




## குறும்(புப்)பா - 44

அடிமுடியாய் வாழ்ந்தநம் வீடு
ஓடியதால் இன்றுசுடு காடு
அடிபட்டு அந்தரித்து தேடிக்குடி யேறவந்தால்
முடியாதாம் ஏதுஇனிக் காடு!


~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உங்கள் சுகமான வாழ்வுக்கு மாதம் ஒரு யோகா

## உத்தானபாத ஆசனம்



### செய்முறை

- விரிப்பின் மீது அமைதியாக அமரவும்.
- பின் கால்களை நீட்டி ஒன்று சேர்த்து மல்லாந்து படுக்கவும்.
- கைவிரல்களை மூடியபடியே படத்தில் காட்டியவாறு அவற்றைப் பக்கவாட்டில் உடம்பை ஒட்டியவாறு வைக்கவும்.
- இரண்டு கால்களையும் சாதாரண நிலையில் தரையில் இருந்து 1 அடி தூரம் மிக மெதுவாக உயர்த்தி சிறிதுநேரம் வைத்துக்கொள்ளவும்.
- பின்னர் மெதுவாக இறக்கி இயல்பு நிலைக்கு வரவும்.
- கால்களை உயர்த்தும்போது மூச்சை உள்ளே இழுக்கவேண்டும். கால்களை இறக்கும்போது மூச்சை வெளியே விடவேண்டும்.
- ஆசனநிலையில் இயல்பான சுவாசத்தில் இருக்கவேண்டும்.
- 10 முதல் 20 வினாடிகள்வரை செய்யலாம்
- பின் இயல்பு நிலைக்கு வந்து சாந்தியாசனத்தில் இருக்கவும்.
- மூன்றுமுறை செய்தால் போதுமானது.

### இதனால் ஏற்படும் பலன்கள்

- உடல் வலிகளைப் போக்குகிறது.
- உச்சி முதல் பாதம் வரையுள்ள அத்தனை நாடி நரம்புகளும் தூண்டப்படுகிறது.
- அடிவயிறு இறுக்கம் பெற்று அழகாகும்.
- தன்னம்பிக்கை ஏற்படும்.
- உடல் நடுக்கத்தைப் போக்குகின்றது.

### இதனால் தீரும் நோய்கள்

- உடல் எடை, அதிக வயிற்றுத்தசை ஆகியவற்றைக் குறைக்கும்.
- மூல வியாதிகள் குணமாகும்.
- பெண்களின் மாதவிடாய்ப் பிரச்சினைகளைச் சரிசெய்கிறது.
- இரத்தக் கோளாறுகள், குடல் வாய்வுக் கோளாறுகளைச் சரிசெய்கிறது.
- மூட்டுவலி, வயிற்றுவலி போன்றவை மறையும்

### குறிப்பு

- ஆரம்பத்தில் சிலருக்கு ஒரேயடியாகக் கால்களைத் தூக்க வராது. நடுங்க ஆரம்பிக்கும். அப்படி நடுங்கினால் கூடுதலாகக் கால்களை உயர்த்தி பழகியபின் ஆசனநிலைக்கு வரவும்.

### மாற்று ஆசனங்கள்

- சலபாசனம்
- புஜங்காசனம்

**மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.**

ஆசிரியர்
M. Nesaraj
Yoga Therapist & Counsellar (India)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்னால் நம்பமுடியவில்லை... எனக்கா இப்படியொரு அதிர்ஷ்டம்...! என்னை ஒரு தடவை கிள்ளிப் பார்த்துக்கொண்டேன். வலித்தது. ஓ நான் சுய உணர்வுடன்தான் இருக்கின்றேன்.

என் வாழ்விலேயே நாளை ஒரு பொன்னான நாள். கடந்த மூன்று வருட காலமாக நான் பட்ட துயரங்கள் ... இழப்புகள்... சோகங்கள்... சோதனைகள்... வேதனைகள்... நான் மட்டுமல்ல இந்தப் பிரதேச மக்கள் அனைவரும் எதிர்கொண்ட அவலம்.... இத்தனை நாளும் அத்தனை மனக்குமுறல்கள். யாரிடம் சொல்லி அழுவது என்று ஏங்கிக்கொண்டிருந்த எனக்கு, அல்ல எமக்கெல்லாம் எனது உணர்வுகளை ஊமைக் காயங்களை வெளிப்படுத்தி இந்த உலக மக்களுக்கு உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்கு நல்ல சந்தர்ப்பம்!

நேற்றுத்தான் 'அவர்' என்னிடம் வந்து அவருக்குரிய தமிழில் "எஞ்சினியர் சேர்... நீங்கள்தான் இந்த வில்லேஜில் படிச்சவர். நாளை பெரியாக்கள் எல்லாம் வெளிநாட்டிலிருந்து வாறது. உங்கட புரொப்ளங்களைச் சொல்லவேணும் சரிதானே"

இவ்வளவுதான் 'அவர்' சொன்னது

யார் வரப்போகிறார்கள்...?

எங்கிருந்து வரப்போகிறார்கள்...?

எத்தனை மணிக்கு...?

கிறிஸ்டி முருகுப்பிள்ளை

எங்கே...? அதெல்லாம் எனக்கோ எம்மூர் மக்களுக்கோ தெரியாது.

ஆனால் மனதில் உண்டான மகிழ்ச்சியைத் தாங்க முடியாமல் எனது 'மால்' இன் முன்னிருந்து நானே எனக்குள் அசை போட்டுக்கொண்டேன்.


புதுமாத்தளனிலிருந்து புல்மோட்டைவரை ஓடி பின் சகனகம முகாமில் ஆறு தர ஆறு அடி அளவுள்ள யுனிசெப் படங்குகளினால் மறைக்கப்பட்ட பீ-52ம் இலக்கக் கொட்டிலில் வாழ்ந்த வாழ்க்கையை எப்படித்தான் மறக்கமுடியும்?

கண்ணுக்கு முன்னே சரிந்த மனித உடலங்கள்... மனித அவயவங்கள்... மனிதர்களின் உறவினர்கள்... எத்தனை சோகமயமான காலங்கள்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



"வெள்ளிக்கிழமைகளில மட்டுந்தான் பிச்ச போடுவம். சனிக்கிழமைகளில கிடையாது."

"வெள்ளிக்கிழம லீவு எண்டதாலதான் சனிக்கிழம வந்திருக்கன்"

• மணி

எனது கிராமத்தில் அனைவராலும் "ஐயா" என அழைக்கப்படும் ஓய்வு பெற்ற பொறியியலாளரான எனது வீடு... முற்றம்... முற்றத்தின் இரு மருங்கிலும் அடர்ந்து நிழல் தரும் கறுத்தக்கொழும்பான் மாமரம். காணியினுள் சுவையான கனிகளைத் தரும் "தேடுவாரற்றுக் கிடக்குதண்ணே வேரில் பழுத்த பலா" என்று அழைக்கப்படும் எனது கையாலேயே நீருற்றி உருவாக்கிய வரிக்கன் பலா மரங்கள்... தென்னைகள்... பனைகள் எனத் தேடித் தேடி வாங்கி எனது அடுத்த தலைமுறைக்காக வளர்த்துவிட்ட மரங்களையெல்லாம் விட்டு விட்டு உடுத்த சாரனுடன் "ஊய்" என்று வரும் செல்லுக்குப் பயந்து ஓடியபோதுதான் ஐயா, என்ஜினியர், பென்சனியர் போன்ற பதவிகள், மரியாதைகள் எல்லாமே பொய், மாயை என்று புரிந்தது.

யாருக்குப் பயப்படுவது என்று வகைப்படுத்தத் தெரியாமால், முடியாமல் நாவும் வயிறும் ஒட்டி உலர்ந்துபோக மரணபயம் எம்மைத் துரத்த ஓடிய அந்த ஓட்டத்தை மறக்கத்தான் முடியுமா?

புல்மோட்டைக்கு வந்தபோதுதான் என்னிடம் எஞ்சியிருந்த முதுசங்களைக் கணக்கிட்டுப் பார்த்துக்கொண்டேன். எனது இரு பெண்பிள்ளைகளுக்கு ஆசையாசையாய் அழகு பார்த்துக் கட்டிய வீடுகள் கண்ணுக்கு முன்னால் தகர்ந்து போன காட்சியும் தாத்தா தாத்தா என்று என்னை வலம் வரும் எனது மூத்தவளின் மகள் "வனஜா" காரணம் தெரியாத... மருந்து இல்லாத... அந்த நிலையில் மருந்து கிடைக்காத நோயினால் இறந்த சோகமும், நாற்பது வருட தேட்டத்தை நகைகளாக உருவாக்கி மிகவும் பத்திரப்படுத்தி வந்த எனது மனைவி நந்திக் கடலில் அமிழ்ந்து உயிருக்குப் போராடியபோது கையிலிருந்து அது நழுவ, தலைமயிரில் என்னால் இழுக்கப்பட்டுத் தப்பியபோது ஏற்பட்ட ஏக்கம்... ஏதிலி நிலை... அடுத்த வேளை சோற்றுக்காக பன்னிரண்டு மணியிலிருந்து மூன்று மணிவரை வரிசையில் நின்று கிடைத்த சோற்றை மிஞ்சிய கறியுடன் கவளம் கவளமாகக் கண்ணீர் மல்க உண்ட துயரம்....

பகல் முழுவதும் கொழுத்தும் வெயிலில் காய்ந்து மாலையில் சற்றுக் குளிக்க ஆசைப்பட்டு அங்கும் வரிசையில் நின்று கிணற்றடிவரை செல்லும்போது அதிகாலை ஒரு மணியாகிவிடும்.

அப்போதுதான் அந்த மாஸ்டர்..... ஆமாம் பிள்ளையளுக்கு கவுன்சிலிங் செய்ய வந்தவர் என்னை எப்படியோ அடையாளங் கண்டு "ஐயா... இந்த முகாமில் இந்த வருடம் பரீட்சை எடுப்பவர்களுக்கு உங்களால் கணிதம் படிப்பிக்க முடியுமே" என்று கேட்டபோதுதான் வீணே நாளைக் கழித்த நான் என்னைச் சுதாரித்துக்கொண்டேன். எத்தனை உயிரிழப்பு, சொத்து இழப்புகளைச் சந்தித்தாலும் "கல்வி" என்ற முதுசம் ஒருபோதும் இழக்கப்படாது என்பதை உணர்ந்துகொண்டு மெய்சிலிர்த்துக் கொண்டேன்.

அந்த ஆறுமாத அகதி வாழ்வில் அனுபவித்த அத்தனை துயரங்களையும் அவமானங்களையும் சகித்துக்கொள்ள முடியாமல் மௌனமாய் அழுத நிலையிலும் இந்தப் பிள்ளைகளுக்கு உதவச் சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி நானே என்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டேன்.

"காயத்தை ஆக்குவதும் காலம்..... அக்காயத்தை ஆற்றுவதும் காலந்தான்" என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்ததை என்னோடொத்த நண்பர்களிடம் அடிக்கடி கூறிக்கொள்வேன்.

மீண்டும் எங்களை மீளக் குடியமர்த்தப் போகிறார்களாம் என்ற செய்தி பரவியதும் எங்கள் முகங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எத்தனை பரவசம்...
புன்னகை... பரஸ்பர
வாழ்த்துகள்... பொக்கைவாய்க்
கிழவர்களும் "உவங்கலாலை
எங்களை நெடுக உப்படி
அடைத்து வைக்க ஏலுமே...
எங்களின்ர வீட்ட
அனுப்பத்தானே வேணும்...
உந்த உலகநாடுகள் சும்மா
விடுமே..." அவர்களின்
எதிர்பார்ப்பையும்
எடுகோள்களையும் கேட்டு
மனதுள் நகைத்துக்கொள்வேன்.
அத்தனை எடுகோள்களும்,
தந்திரோபாயங்களும் பொய்த்துப்
போய்.... தோற்றுப்போன ஒரு
சமூகமாக வாழும் இவர்களுக்கு
இன்னும் 'எங்கட பெடியன்கள்'
என்ற நம்பிக்கைத் துளிகள்
பூக்கத்தானே செய்கின்றன.

நாளையோ... இன்றோ
என்ற சந்தேகத்தில்
நடைப்பிணமாக வாழ்பவர்கூட
எனது முற்றத்திலுள்ள
வெள்ளைக் கொழும்பான் இப்ப
காய்த்திருக்கும்.... போன
போக்கில இலை குலைகள
வெட்டிப் போட்டு அதுக்குக்
கீழதான் படுக்க வேணும் என்று
நம்பிக்கையோடு சொல்வார்கள்.
உலகத்தின் ஓட்டம் ஓரளவு
புரிந்த நான் மீண்டும்
நகைத்துக்கொள்வேன்.

அடுத்த மாதம்... வாற
கிழமை... நாளைக்காம்
என்றெல்லாம் நாட்கள் சுருங்கி
ஊர் ஊராகப் பெயர்கள் பதிந்து
நிவாரணமாகக் கிடைத்த
பொருட்களையெல்லாம்
உரப்பையில் கட்டி காலை நாலு
மணிக்கெல்லாம் ரெடியாகி
மணிக்கணக்கில் பார்வைகள்
காய்ந்து களைத்துப்போன
நிலையில் மாலை நாலு
மணிவரை காத்துக் கிடந்த
எங்களை பஸ்சுக்குப் பதிலாக
லொறி வந்து வகை
தொகையின்றி
அடைத்துக்கொண்டபோது
ஏற்பட்ட சலிப்பு... தமது
ஊருக்குப் போகப்போகிறோம்
என்ற மகிழ்ச்சியில் ஒரு
பொருட்டாகவே
தோன்றவில்லை.

அகதி வாழ்வில் பெற்ற
நிவாரணங்களைக் கூட பல
இடங்களில் "செக்கிங்" செய்து
விரித்தாவது படுக்கலாம் என்று
ஒளித்து ஒளித்துக்
கொண்டுவந்த "யுனிசெப்"
படங்குகளும் பலவந்தமாகப்
பறித்தெடுக்கப்பட்டு மீளக்
குடியேறும் களிப்பில் வந்த
எங்களை இங்கே
கொட்டிவிட்டார்கள். நான்
துணிந்தே கேட்டுவிட்டேன்.

"சேர்... நாங்கள்
எங்களின்ர ஊருக்குப்
போகவேணும்.
புல்மோட்டையில் கம்பி
வேலிக்குள் 'மால்'
கட்டித்தந்தாங்க. இங்க கம்பி
வேலி மட்டுந்தான் இல்ல.
மத்ததெல்லாம் ஒரே
மாதிரித்தானே. அடுத்த
ஊர்தானே எங்கட ஊர்... போக
விடுங்கோவன்..."

"ஐயா... அது... அங்க
கண்ணிவெடி இருக்கு. கிளியர்
பண்ணவேணும். கிளியர்
பண்ண ஆக்கள் வாறாங்க...
வாற மாதம் போகலாம்.
அதுவரை இங்க இருங்க...
சந்தோசம்தானே... ஆனா
எங்களுக்குத் தெரியாம உங்கட
ஊருக்குப் போகக் கூடாது.
தெரியும்தானே..."
ஒருவகையான வெருட்டலுடன்
அவர் கூறிச் சென்றார்.

புல்மோட்டை அகதியாக
ஆறுமாதம் இருந்து மீளக்
குடியேறி மேலும் ஆறு மாதம்
ஆனபோதும் எங்கள் ஊருக்கு
இன்னும் சென்றபாடில்லை.
தொடரும் வேதனைகள்
கண்ணுக்கு எட்டிய தூரத்தில்
இருக்கும் ஊரைப் பார்த்து
பெருமூச்சு விடுவதைத் தவிர
இந்த "தோற்றுப்போன
வசந்தங்களால்" என்னதான்
செய்ய முடியும்?

அமைச்சர்கள் வந்தனர்...

அரசியல்வாதிகளும் வந்தனர்....

அதிகாரிகளும் வந்தனர்....

ஆறுதல் சொன்னார்கள்.
"வாறகிழமை நீங்க உங்கட
வீட்ட போகேலும்" எத்தனை
வாக்குறுதிகள்....! இதுவரை
இருபதுக்கு மேற்பட்ட "வாற
கிழமைகள்" வந்துவிட்டன.
ஆனால் நெஞ்சில் எழும்



"இவள் அடிக்கடி வாந்தி
எடுக்கிறாள் டொக்டர்ட்ட
கூட்டிட்டுப் போறன்"

"இதுக்கெல்லாம் டொக்டர்
எதுக்கு? எத்தின சினிமா
பாக்கிறா தெரியல்லையா?"

• மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கேள்விகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் பதில் கிடைக்கவேயில்லை.

இந்தப் பாழாய்ப்போன நெஞ்சு வெடித்தாலும் ஒரு நிமிடத்திலேயே ஆறுதல் கிடைத்துவிடும்.

கடவுளை வேண்டுவதா....?

காலத்தை நொந்துகொள்வதா...?
இரண்டையும் மறந்து நிஜத்தை மட்டுமே நம்பும் காலகட்டத்தில் நொந்தல்லவா கிடக்கின்றோம்.

எனது 'மாலின்' முன் குந்தியிருந்து அத்தனை சம்பவங்களையும் அசைபோட்ட போதுதான் "ரொட்டி சுட்டுட்டன் சாப்பிடுவம்" என்று மனைவியின் குரல் கேட்டது. தருகின்ற நிவாரணம் கோதுமை மாவாக மட்டும் இருக்கையில் உள்ள வாய்ப்புகள்... வசதிகளில்... ரொட்டியைத் தவிர வேறு என்னதான் எஞ்சினியரின் மனைவியிடம் எதிர்பார்க்க முடியும்?

எஞ்சினியரின் பென்சனுக்குக் கேட்கப்பட்ட ஆதாரங்கள் நந்திக் கடலில் சங்கமமாகிய நிலையில் எழுதிக் கொடுக்கப்பட்ட "போம்கள்" கடிதங்கள் எல்லாம் எங்களைப் போல்தான் உரிய இடத்தை அடைய முடியாமல் இடையில் தேங்கியுள்ளனவோ?

நாளை இந்த மக்களின் அவல நிலைகளை எவ்வாறு முடிந்தளவு ஆங்கிலத்தில் சொல்வது என்று வார்த்தைகளை ஒழுங்குபடுத்தியபடி "மாலின்" மூலையில் ஒருக்களித்தேன்.

"எஞ்சினியர் ஐயா! வெளியே வாறது..."

நாய்களின் குரைப்புச் சத்தம்...

ஓ 'அவரா' என்று மனதில் ஊகித்தபடி வெளியே வந்தேன். ஆம் 'அவர்'தான் நின்றிருந்தார்.

என் முதுகைத் தட்டியபடியே "எஞ்சினியர், நாளைக்கு எங்கட லோக்கல் பொறின் றிப்போட்டர்ஸ் வாறாங்க. உங்களத்தான் 'செற்' பண்ணியிருக்கோம். அவங்க உங்களிட்ட கேள்வி கேப்பாங்க... என்ன சொல்லவேணும் தெரியுந்தானே?" என்று என் கண்களை உற்றுப் பார்த்தபடி சொல்லிக்கொண்டேயிருந்தார்.

என்னால் நிற்கமுடியவில்லை...

கால் சற்று இடறியது...

"என்ன ஓகேதானே... மாறி ஏதும் சொன்னா தெரியுந்தானே... உங்கட பென்சன் உங்கட மனைவிக்குத்தான் கிடைக்கும் ஓகே" இந்த ஓகே மட்டும் சற்று அதிகாரமாக... அர்த்தமானதாக... அச்சமூட்டுவதாக... எனது உயிர்க்குலைக்கு ஆணையிடுவதாக அமைந்தது. எனக்கு மயக்கம் வரும்போலிருந்தது.

உதடுகள் விம்மி வெடித்தன...

கால்கள் தடுமாறின...

பக்கத்தில் நின்ற என் மனைவியின் தோளில் சற்று சாய்ந்துகொண்டேன். கண்கள் இருட்டத் தொடங்கின.

அந்த இருட்டிலும் ஓர் ஒளி... துல்லியமாகத் தூரத்தில் தெரிந்து மெல்ல மெல்ல சிறிது சிறிதாக மறைந்து ஓய்ந்து போனது.

அது... அது... அதுதான் உண்மையின் ஒளியா?

உண்மைக்கு, சத்தியத்துக்கு எதிராக எல்லாவற்றையும் இழந்துபோன, தோற்றுப்போன எம் மக்களுக்காக எதுவும் உரைக்க முடியாமல் போய் பொய்மை வெல்லப்போகின்ற நாளைப் பொழுது எனக்குத் தேவைதானா....?

எனது நெஞ்சமும் தவித்து... தழைந்து... விக்கித்துப்போய்... விம்மி வெடித்து ஓய்ந்து போனது.

எங்கும் அமைதி!

எல்லாமே ஏகாந்தம்!

●

**- யாவும் கற்பனை -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறுநீரகச் செயலிழப்பு உள்ளவர்கள் பின்பற்றவேண்டிய உணவுமுறை


## பொஸ்பரசு

பொஸ்பரசு உள்ள உணவு வகைகள் அனேகமாகப் புரத உணவு வகைகளே. சிறுநீரக நோயாளிகள் புரத உணவைக் குறைத்து எடுப்பதால் பொஸ்பரசு அதிகரிக்க வாய்ப்பில்லை.

## நீர்

சிறுநீரகங்களால் உடலில் உள்ள நீரின் அளவு கட்டுப்படுத்தப்படுகின்றது என்பது யாவரும் அறிந்ததுதான். பொதுவாக சிறுநீரக நோய்கள் ஏற்படுவதற்குக் காரணம் அன்றாட வாழ்வில் போதுமான நீர் - சுத்தமான நீர் அருந்தாமைதான் என்பது மருத்துவர்களின் கருத்து. ஒரு நாளைக்கு ஆறு போத்தல் அல்லது மூன்று லீற்றர் சுத்தமான நீர் அருந்துவதால் பெரும்பாலான நோய்கள் வருவதைத் தடுத்துவிடலாம்.

சிறுநீரகச் செயலிழப்பு உள்ளவர்களிடம் நீர் வெளியேறுவது குறைவடையும். ஆதலால், உடலில் நீர் தேங்கி வீக்கமடையச் சந்தர்ப்பம் உண்டு. ஆகவே, நாம் வெளியேற்றுகின்ற சிறுநீரின் அளவுகளைக் குறித்து வைத்து அதற்கேற்ப நீரோ அல்லது நீராகாரங்களோ (பால், கோப்பி, பழச்சாறு) அருந்தவேண்டும்.



## கொழுப்பு

நீண்டகாலச் சிறுநீரக செயலிழப்பு உள்ளவர்களின் இரத்தத்தில் (கொலஸ்ரோல்) கொழுப்பின் அளவு அதிகரித்துக் காணப்படும். இவை இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படிதல், உயர் இரத்த அழுத்தம், இதய நோய்கள் போன்றவைகளுக்கு இட்டுச் செல்லலாம். விலங்குகளில் இருந்து பெறப்படும் இறைச்சி, பால், முட்டை போன்றவை கொழுப்புக் கூடிய உணவுகளாகும். சிறுநீரக நோயாளிகள் இவைகளைக் குறைந்த அளவில் எடுப்பது நல்லது. புரத உணவைக் குறைப்பதற்கு இவ்வுணவு வகைகளைக் கட்டுப்படுத்துவது அவசியமாகும். எனினும் மாதமொரு முறை மருத்துவப் பரிசோதனைகள் செய்வதன் மூலம் நமது உணவுகளின் அளவை நாம் சரிப்படுத்திக்கொள்ள முடியும்.

இதுபோல் இரத்தத்தில் புரதம் குறைதலானது நாம் புரத உணவை தேவையான அளவிலும் குறைவாக எடுப்பதை அல்லது காபோஹைதரேற்று உணவுகள் குறைவதால் சக்தித் தேவைக்காகப் புரதம் பயன்படுத்தப்படுவதைக் குறிக்கலாம். ஆகவே, சரியான மருத்துவ ஆலோசனையுடன் உணவு முறைகள் பரீசீலனை செய்யப்படுவது மிகவும் நன்று.

## சிறுநீரகச் செயலிழப்புக்கு மருந்துகள்

சிறுநீரக நோய்களுக்கும்

தொடர்ச்சி 23ம் பக்கம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தெரிந்துகொள்ளுங்கள்




ஏதாவது ஒரு விடயம் பற்றிப் பேசுவதற்காக அல்லது பிரச்சினைகளை தீர்ப்பதற்காய் ஒன்றுகூட்டப்படுவது அல்லது சேர்ந்த சங்கங்கள் இவ்வாறு ஒன்றுகூட்டப்பட்ட சங்கங்களாய் 2ம் வத்திக்கான் சங்கத்துடன் 21 சங்கங்கள் காணப்பட்டன. அவையும் அவற்றின் நோக்கங்களும் வருமாறு:

| | | |
|---|---|---|
| 01. நிசயா சங்கம் I | - 325ல் | - கிறிஸ்துவின் இறை இயல்பு |
| 02. கொன்ஸ்தாந்தி நோபிள் I | - 381ல் | - தூய ஆவியின் இறை இயல்பு |
| 03. எபேசு சங்கம் | - 431ல் | - மரியாள் இறைவனின் தாய் |
| 04. கால்செதோன் | - 451ல் | - இயேசுவின் மனித / இறை இயல்பு |
| 05. கொன்ஸ்தாந்திநோபிள் II | - 553ல் | - நெஸ்தோரியஸ் கண்டனம் செய்யப்படல் |
| 06. கொன்ஸ்தாந்திநோபிள் III | - 680-681ல் | - இயேசுவின் மனித / இறை இயல்புகள் |
| 07. நிசயா II | - 797ல் | - சுரூப வணக்கம் |
| 08. கொன்ஸ்தாந்திநோபிள் IV | - 869-870 | - பேசியுஸ் கண்டனம் செய்தல் |
| 09. இலாத்திரன் I | - 1123ல் | - திருச்சபையின் சீர்திருத்தம் |
| 10. இலாத்திரன் II | - 1139ல் | - பிளவு தவிர்த்தல் |
| 11. இலாத்திரன் III | - 1179ல் | - திருத்தந்தையர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறை பற்றியது |
| 12. இலாத்திரன் IV | - 1215ல் | - பாஸ்கா கடன் |
| 13. இலயன்ஸ் I | - 1245ல் | - மன்னன் 2ம் பிரடெரிக் பதவி நீக்கம் |
| 14. இலயன்ஸ் II | - 1274ல் | - கிரேக்கர்களோடு ஒன்றிப்பு |
| 15. வியன்னா | - 1312ல் | - திருச்சபை சீர்திருத்தம் |
| 16. கொன்ஸ்தாந்து | - 1414-1418 | - மேலைப் பெரும் புள்ளிக்கு முற்றுப்புள்ளி |
| 17. பெர்ராரா - புளோரன்ஸ் | - 1437-1445 | - கீழைத்தேய சபையினருடன் ஒன்றிப்பு |
| 18. இலாத்திரன் V | - 1512-1517 | - திருச்சபை சீர்திருத்தம் |
| 19. திரித்தெந்தின் | - 1545-1563 | - சீர்திருத்த சபையினருக்கு எதிர்ப்பு |
| 20. வத்திக்கான் I | - 1869-1870 | - உரோமைய ஆயரின் முதன்மை வழுவாவரம் |
| 21. வத்திக்கான் II | - 1962-1965 | - உலகோடு உரையாடும் திருச்சபை |

2ம் வத்திக்கான் சங்கத்திலுள்ள 16 கொள்கைத் திரட்டுகளும் ஆண்டுகளும்

| | |
|---|---|
| 01. திருச்சபை பற்றிய மறைக் கொள்கைத் திரட்டு | - 21.11.1964 |
| 02. இறை வெளிப்பாடு பற்றிய மறைக் கொள்கைத் திரட்டு | - 18.11.1965 |
| 03. திருவழிபாடு பற்றிய மறைக் கொள்கைத் திரட்டு | - 04.12.1963 |
| 04. இ.உ.தி/பை மேய்ப்புப் பணி | - 07.12.1965 |
| 05. தி/பை ஆயர்களின் பணி | - 28.10.1965 |
| 06. தி/பை மறை அறிவிப்பு பற்றிய தீர்ப்புத் தொகுப்பு | - 07.12.1965 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

07. கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய தீர்ப்புத் தொகுப்பு - 21.11.1964
08. கத்.தி/பை பற்றிய மறைக் கொள்கைத் திரட்டு - 21.11.1964
09. குருக்களின் பணிவாழ்வு மறைக் கொள்கைத் திரட்டு - 07.12.1965
10. குருத்துவப் பயிற்சி பற்றிய மறைக் கொள்கைத் திரட்டு - 28.10.1965
11. தழுவியமைத்து துறவற வாழ்வைப் புதுப்பித்தல் - 28.10.1965
12. பொதுநிலையினர் மறைத்தூதுப் பணி - 18.11.1965
13. சமூகத் தொடர்புக் கருவிகள் - 04.12.1963
14. மறைச் சுதந்திரம் பற்றிய அறிக்கை - 07.12.1965
15. கிறிஸ்தவமல்லா மறைகளோடு திருச்சபை தொடர்பு - 28.10.1965
16. கிறிஸ்தவக் கல்வி பற்றிய அறிக்கை - 28.10.1965

**2ம் வத்திக்கான் சங்கத்தின் 5 முக்கிய இலக்குகள்**

01. நவீன உலகிற்கும் கத்தோலிக்கத்துக்கும் இடையே நல்ல உறவுகளை ஏற்படுத்தல்.
02. முன்னைய சங்கத்தில் பாவிக்கப்பட்ட கடும் போக்கினைத் தளர்த்தல்.
03. உரோமைக் கத்தோலிக்க சபையில் மட்டுமின்றி ஏனைய சமயங்களில் சொல்லப்படும் அடிப்படை உண்மைகளை ஏற்றுக்கொள்ளல்.
04. சமய சுதந்திரத்தை மதித்தல்.
05. கத்தோலிக்க ஆன்மீகத்தைப் புதுப்பித்தல்.

21ம் பக்கத் தொடர்ச்சி...

செயலிழப்புக்கும் பல்வேறு மருத்துவ முறைகளிலும் பல்வேறு மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை தவிர மருந்தில்லா மருத்துவ முறைகளான அக்கியு பஞ்சர், அக்கியு பிறசர், யோகாசனம் மற்றும் தொடு சிகிச்சை முறைகளும் உள்ளன.


மருந்துகள் எடுப்பதாயின் எந்தெந்த மருந்துகள், எப்படி எடுக்கவேண்டும் என்பதை மருத்துவரது ஆலோசனையோடு மட்டுமே எடுக்க வேண்டும்.

**01. சிறுநீரை வெளியேற்றக் கூடிய மருந்துகள்**
**02. எலும்புகளை உறுதியாக்கும் மருந்துகள்**
**03. குருதியில் ஹீமோகுளோபின் அளவைப் பேண உதவும் மருந்துகள்**
**04. இரத்த அமுக்கத்தை கட்டுப்படுத்தும் மருந்துகள்**
**05. விற்றமின்கள்**

என்று பல்வேறுபட்ட மருந்துகள் எடுக்க நேரலாம். இவைகளை மருத்துவரே நிச்சயப்படுத்த வேண்டும். ஏனெனில் சில மருந்துகளைப் பாவிக்கும்போது அதனால் பக்கவிளைவுகள் ஏற்படலாம். எனவே, வைத்தியரின் ஆலோசனையோடு மட்டுமே மருந்துகளைப் பாவிக்கவேண்டும்.

– இன்னும் வரும்....

• தொகுப்பு: சித்தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழ்த் திரைப்பட வரலாறு

V.S

சமய - சமூக - இலக்கிய வெளியீடாகத் தன்னைத் தற்பொழுது வியாபித்துள்ள தொண்டன் 1969ம் ஆண்டு பெப்ரவரி மாதம் பத்திரிகையாகவே முதன் முதலில் வெளிவந்தது. பின்பு சஞ்சிகையாக (புத்தக வடிவம்) மாறி தங்குதடையின்றித் தனது தொண்டைத் தொடர்ந்து ஆற்றிவருகின்றது. "சமூகம்" என்று கூறும்போது இன்றைய காலகட்டத்தில் ஒரு குறுகிய வட்டத்துள் நின்று மதிப்பிட முடியாது. வளர்ந்துவரும் இளம் சமூகம் பல்வேறு சமூகச் சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளது கண்கூடு. இன்றைய சமூகம் வேண்டி நிற்பதோ பரந்ததோர் அறிவு. இந்த இலக்கை நோக்கித்தான் தொண்டன் நகர்ந்துகொண்டிருக்கிறது. அந்த வகையில் சமய அறிவு மட்டும் சமூகத்தை வழிநடத்தும் என்பது பக்கச் சார்பான வாதமே அல்லாது பரந்த, தூர நோக்குடைய வாதமாக இருக்க முடியாது.

அறிவியல் - உளவியல் - அரசியல் - கலை - இலக்கியம் - சினிமா இவை அனைத்தும் மனித வளர்ச்சியின் படிக்கற்கள்தான். "கண்டது கற்கப் பண்டிதனாவாய்" என்பது முதுமொழித் தத்துவம். இன்றைய காலகட்டத்தில் க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் மூன்று 'A' எடுத்தால் மட்டும் போதாது. பொதுப் பரீட்சையில் (நுண் அறிவு, பொது அறிவு, பிரச்சினை தீர்த்தல், மொழி அறிவை உள்ளடக்கக்கூடியது) குறிப்பிட்ட புள்ளிகளைப் பெறமுடியாத பட்சத்தில் பல்கலைக்கழகத்துக்குள் நுழையமுடியாது. அதுமட்டுமல்ல நேர்முகப் பரீட்சை - S.L.A.S, S.L.E.A.S அதிபர் பரீட்சை போன்ற பரீட்சைகளுக்கு முகங்கொடுப்பதற்கு பரந்த அறிவு தேவை. அவ்வாறான பூரண அறிவைப் பெற்றுக்கொடுக்க தொண்டனால் முடியாவிட்டாலும்கூட பல படிகள் உயர்ந்து தொண்டாற்ற விளையும் தொண்டன் எமது வாழ்வில் முழுக்க முழுக்கப் பின்னிப் பிணைந்துள்ள தமிழ்த் திரைப்படங்கள், திரையிசைகள் பற்றி விமர்சிக்க முன்வருகிறது. தமிழ்த் திரைப்படங்களும் சரி, திரையிசைகளும் சரி முற்றுமுழுதாகத் தீயவை என்று புறந்தள்ளிவிட முடியாது. பல்வேறு இலக்கியங்களையும் இலக்கணங்களையும் தத்துவங்களையும் பிரச்சினை தீர்க்கும் வழிகளையும் வாழும் வாழ்க்கை நெறிகளையும் புரிந்துணர்வுகளையும் பாரம்பரியம், பண்பாடுகள் வெற்றி தோல்விகள், இலக்கிய வாழ்க்கை நெறிகள் என்பவற்றையும் உணர்ச்சிபூர்வமாக, துல்லியமாக முன்வைத்தது சினிமாத்துறைதான். இருந்தும் யதார்த்தத்துக்குப் புறம்பாக சில ஆபாசங்கள் அதனுள் கலந்துள்ளதையும் இங்கு சுட்டிக்காட்டத்தான்வேண்டும். இருந்தும் வளர்ந்துவரும் சமூகம் அன்னத்தைப் போன்று தண்ணீரை விட்டுவிட்டு பாலை மட்டும் நுகர்ந்து பயனடைவது சாலச் சிறப்புடையது மட்டுமல்ல, புத்திஜீவிகளின் சிறப்புங்கூட. இந்த வகையில் தமிழ்த் திரைப்படங்களின் பங்களிப்புப் பற்றியும் ஆராயவேண்டிய தேவை உண்டு.



தமிழ்த் திரைப்படத் தயாரிப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சென்னை முதலிடம் வகிக்கிறது. இங்கு தமிழ்ப்படங்கள் மட்டுமல்ல, தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிப் படங்களும் தயாரிக்கப்படுகின்றன. "இந்தியாவின் ஹாலிவுட்" என்று சொல்லும் அளவுக்கு சென்னை கோடம்பாக்கத்தில் ஏராளமான ஸ்ருடியோக்கள் நிர்மாணிக்கப்பட்டன. சினிமாத்துறையில் முதலாவது தமிழ்ச் சினிமாப்படம் 1916ம் ஆண்டு "கீசகவதம்" ஊமைப்படமாக வெளிவந்தது. இப்படத்தை ஆர்.நடராஜ முதலியார் தயாரித்துள்ளார். இவர் ஒரு மோட்டார் வர்த்தகராகத் திகழ்ந்தவர். சினிமாத்துறையில் கொண்ட ஆர்வம் காரணமாக சென்னை கீழ்ப்பாக்கம் மில்லர்ஸ் ரோட்டில் ஒரு ஸ்ருடியோவை நிறுவினார். "இந்தியா பிலிம் கம்பனியை" ஆரம்பித்து சினிமாத்துறையை வளர்த்தார். "கீசகவதம்" படத்தின் டைரக்டர், கெமராமேன், எடிட்டர், எல்லாமே நடராஜ முதலியார்தான்.





தொடர்ந்து திரௌபதி வஸ்திராபரணம், மயில்ராவணன், மார்க்கண்டேயா ஆகிய படங்களைத் தயாரித்த நடராஜ முதலியார் பின்னர் நிதி முடக்கீடு காரணமாகப் படத்தயாரிப்பை நிறுத்திவிட்டார். வேறுபலரும் ஊமைப்படங்களைத் தயாரித்து வெளியிட்டனர். மேல்நாட்டு ஊமைப்படங்களுடன் இவை போட்டி போட்டு ஓடியமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் 1931ல் முதலாவது பேசும் படமாக "ஆலம் ஆரா" (இந்திப்படம்) வெளிவந்தது. இப்படத்தைத் தயாரித்த அர்தேஷ் இராளி தமிழ்ப்படத் தயாரிப்பிலும் இறங்கினார். எச். எம். ரெட்டியைக் கொண்டு "காளிதாஸ்" படத்தைத் தயாரித்தார். முதற் பேசும் படமான காளிதாஸ் 1931 ஒக்டோபர் 31ம் திகதி வெளியிடப்பட்டது. இப்படத்தின் கதாநாயகன் நரசிம்மராவ், கதாநாயகி டி.பி.ராஜலட்சுமி.

தமிழ்ச் சினிமா உலகின் முதற் பொற்காலத்தை உருவாக்கியவர் எம்.கே.தியாகராஜபாகவதர். நாடகங்களில் நடித்துவந்த தியாகராஜ பாகவதரை இயக்குனர் கே.சுப்பிரமணியம் பட உலகிற்குக் கொண்டுவந்தார். அவரது முதற்படம் பவளக்கொடி. இது 1934ல் வெளியாகியது.

தியாகராஜபாகவதரின் கவர்ச்சிமிகு அழகிய தோற்றம், அமுதக் குரல், நடிப்புத் திறன் என்பன பாகவதரின் புகழை நாடெங்கும் பறைசாற்றியது. பின்பு "நவீன சாரங்கதாரா", "சத்தியசீலன்" ஆகிய படங்களிலும் தனது திறமைகளை வெளிப்படுத்தினார். 1937ல் பாகவதர் நடித்த "சிந்தாமணி" என்ற படம் வரலாறு படைத்தது. தமிழ்நாட்டின் முதல் மெகா சூப்பர்ஹிட் திரைப்படமாக பல ஊர்களில் ஒரு வருடத்திற்கு மேல் ஓடிப் புகழ் பரப்பியது. இப்படத்தைத் தயாரித்த மதுரை ராயல் டாக்கீசார் வசூல் மழையில் நனைந்தனர். இப்படத்தில் பாகவதரின் சோடியாக கன்னட நடிகை "அஸ்வத்தம்மா" நடித்தது மட்டுமல்ல பாகவதருடன் ஈடுகொடுத்தும் பாடினார். அதே ஆண்டில் (1937) அடுத்த வெற்றிப்படமாக "அம்பிகா பதி". பாகவதருடன் சோடியாக நடித்தவர் எம்.ஆர்.சந்தானலட்சுமியாவார். இவ்விலக்கியப் படைப்பை வெள்ளைக்காரரான எல்லிஸ் ஆர். டங்கன் இயக்கியிருந்தார். முதன்முதலில் நல்ல தமிழில் இளங்கோவன் திரைக்கதை வசனத்தை எழுதியிருந்தார்.

பாகவதர் தானே சொந்தமாகத் தயாரித்த படம் "திரு நீலகண்டர்". இதன் இயக்குனர் ராஜா சாண்டோ. இப்படமும் மகத்தான வெற்றியீட்டியது. இப்படத்தில் இடம்பெற்ற பாடல்களாவன "தீனகருணாகரனே" "சராச்சரங்கள் வரும் சுழன்றே" "ஒருநாள் ஒரு பொழுது" "சிதம்பரநாதா" இவை அனைத்தும் அன்றைய காலகட்டத்தில் பாகவதரின் நடிப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நல்ல மெருகேறிக் காட்சியளித்தன. தொடர்ந்து 1941 - அசோக்குமார், 1943ல் சிவகவி படங்களிலும் நடித்தார்.


1944ல் வெளியான "ஹரிதாஸ்" பாகவதரை புகழின் சிகரத்திலேயே ஏற்றிவிட்டது. அவரின் மனைவியாக என்.சி.வசந்தகோகிலம் நடித்திருந்தார். வில்லியாக டி.ஆர்.ராஜகுமாரி நடித்திருந்தார். இப்படத்தை இயக்கியவர் சுந்தர்ராவ் நட்கர்னி. மன்மத லீலையை, கிருஷ்ணா முகுந்தா, அன்னையும் தந்தையும் ஆகிய பிரபல்ய பாடல்கள் மூலைமுடுக்கெல்லாம் மக்களால் திரும்பத் திரும்ப இசையோடு பாடப்பட்டவைதான். இப்படம் தொடர்ந்து மூன்று தீபாவளிகளைக் கண்டது. (110 வாரங்கள்) தமிழ் சினிமாவில் இன்றுவரை எந்தப் படமும் இந்த சினிமா ரெக்கோட்டைத் தாண்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கதே.

1944ம் ஆண்டு ஒக்டோர் 16ம் திகதி திரையுலகின் மாபெரும் சாதனையின் தொடக்கநாள். பாகவதரின் 9வது படம் இது. "ஹரிதாஸ்" அனைவராலும் பேசப்பட்ட, புகழப்பட்ட, நெஞ்சை விட்டகலாத படம். அப்போது இரண்டாவது உலகப் போர் நடந்துகொண்டிருந்தது.

இப்படத்தில் பாகவதர் முற்றிலும் மாறுபட்ட வேடத்தில் நடித்தார். இதற்கு முன்பு பக்திமானாக, நல்லவராக மட்டுமே நடித்திருந்தவர், இப்படத்தில் இடைவேளைவரை பெண் பித்தனாகவும், மதுவின் அடிமையாகவும் பெற்றோரை வெறுப்பவராகவும் நடிக்கிறார். இடைவேளையின் பின்பு முனிவரால் சபிக்கப்பட்டு இரண்டு கால்களையும் இழந்து பெற்றோர் பாதங்களைச் சரணடைந்து மீண்டும் கால்களைப் பெற்று பக்திமானாக மாறுகிறார்.

இப்படத்தில் பாகவதர் மிகமிக அற்புதமாக நடித்ததாகப் பேசப்பட்டது.

முதற்காட்சியில் வெள்ளைக் குதிரையில் "வாழ்விலோர் திருநாள்" என்று பாடிக்கொண்டு வரும்போது இரசிகர்களால் கைதட்டல்களை அமோகமாகப் பெற்றார். "மன்மத லீலையை வென்றார் உண்டோ" என்ற பாடலுக்கு டி.ஆர்.ராஜகுமாரி ஆட அனைவரும் ஆரவாரமாக இரசித்து மகிழ்ந்ததாகப் பேசப்படுகிறது. இப்படப் பாடல்களை அன்று பாபநாச சிவன் எழுதியிருந்தார். அவற்றுக்கு இசை உயிர் அளித்தவர் ஜீ.ராமநாதன். தொழில்நுட்பத்திலும் இப்படம் சிறப்பாகவே அமைந்திருந்தது. என்.எஸ்.கிருஷ்ணன், டி.எம்.மதுரம் ஆகியோர் நகைச்சுவைப் பாத்திரங்களில் தூள் கிளப்பியதாகப் பேசப்படுகிறது. இப்படத்தின் பின்பு பாகவதர் ஒரே நேரத்தில் 10 படங்களில் நடிக்க ஒப்பந்தமானார். "ஹரிதாஸ்" படத்தை பாகவதரின் ரசிகர்கள் 10த்து 12ண்டு தடவைகள் பார்த்து இரசித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ●



"இவருக்கு எப்பிடி இருமல் வந்தது?"

"சினிமாவில வாற இருமல் பாட்டுகள அடிக்கடி பாடிக்கொண்டிருந்தவர். பாடல் வரல்ல, இருமல் வந்திட்டு"

● மணி



## குறும்(புப்)பா - 45

கற்றதனா லாயபயன் என்கொல்
கால்நோவ நடந்தவர்கள் முனகல்
விற்றதனா லிலைவீடு காணிவேலை தானுமிலை
மற்றதெலா மூழல்வே றில்லை

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி 15- 09 - 2010

'பரிசுப் போட்டி'

# விவிலியம் கற்போம் - 90

(எண்ணிக்கை 26:1–65)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

அந்தக் கொள்ளை நோயின் பின் ஆண்டவர் மோசேயிடமும் குரு ஆரோன் மகன் எலயாசரிடமும், "இஸ்ரயேல் மக்களின் கூட்டமைப்பு முழுவதிலும் இருபது வயதும் அதற்கு மேலும் உள்ள போருக்குச் செல்லத்தக்க ஆண்கள் அனைவரையும் அவர்கள் ........................................ வீடுகள் வாரியாகக் கணக்கெடுங்கள்" என்றார். இருவரும் மோவாபு சமவெளியில் அவர்களிடம், "இருபது வயதும் அதற்கு மேலுமுள்ள ஆண்கள் அனைவரையும் கணக்கெடுங்கள்" என்று கூறினர். .................................... நாட்டிலிருந்து வெளியேறி வந்தவர்களின் பட்டியலின்படி ரூபனின் குடும்பத்தார் நாற்பத்து மூவாயிரத்து எழுநூற்று முப்பது பேர். சிமியோன் குடும்பங்களிலிருந்து இருபத்து இரண்டாயிரத்து இருநூறு பேர். ........................................ புதல்வர் குடும்பங்களிலிருந்து நாற்பதாயிரத்து ஐநூறு பேர். யூதாவின் குடும்பங்களிலிருந்து எழுபத்தாறாயிரத்து ஐநூறு பேர். இச்சார் குடும்பங்களிலிருந்து அறுபத்து நாலாயிரத்து முந்நூறு பேர். ............................................ குடும்பங்களிலிருந்து அறுபதாயிரத்து ஐநூறு பேர். மனாசேயின் குடும்பங்களிலிருந்து ஐம்பத்தீராயிரத்து எழுநூறு பேர். எப்ராயீம் குடும்பங்களிலிருந்து முப்பத்தீராயிரத்து ஐநூறு பேர். ............................................ புதல்வர்கள் தொகை நாற்பத்தையாயிரத்து அறுநூறு. தாண் குடும்பங்களிலிருந்து சூகாம் குடும்பத்தினர் அறுபத்து நாலாயிரத்து நானூறு பேர். ஆசேர் புதல்வர் குடும்பத்தினர் ஐம்பத்து மூவாயிரத்து நானூறு பேர். ............................ குடும்பத்தினர் தொகை நாற்பத்தையாயிரத்து நானூறு என்றவாறு எண்ணப்பட்டனர். ஆக, இஸ்ரயேலின் ஆண் மக்கள் தொகை ஆறு லட்சத்து ஓராயிரத்து எழுநூற்று முப்பது. ஆண்டவர் மோசேயிடம் கூறியது: பெயர்களின் எண்ணிக்கைக்குத்தக்கவாறு இந்நாடு உரிமைச் சொத்தாகப் பங்கிடப்படும். குலங்களுள் பெரியவற்றுக்குக் கூட்டியும், சிறியவற்றுக்குக் குறைத்தும் ........................................ சொத்தைக் கொடுப்பாய். ஆயினும், திருவுளச் சீட்டு முறையிலேயே நாடு பங்கிடப்படும். உரிமைச் சொத்தும் பங்கிடப்படும் என்றார். லேவியருள் ஒரு மாதமும் அதற்கு மேலும் வயதுடைய ஆண்களில் எண்ணப்பட்டோர் இருபத்து மூவாயிரம் பேர். இஸ்ரயேல் மக்களிடையே அவர்கள் பதிவு செய்யப்படவில்லை. ஏனெனில் இஸ்ரயேல் மக்களிடையே அவர்களுக்கு எந்த உரிமைச் சொத்தும் தரப்படவில்லை. மோசேயாலும் குரு எலயாசராலும் எண்ணப்பட்டோர் இவர்களே. அவர்கள் ........................................ மக்களை எரிகோவுக்கு எதிரே யோர்தானை அடுத்த மோவாபியச் சமவெளியில் எண்ணினார்கள். ஆனால், சீனாயப் பாலை நிலத்தில் எண்ணப்பட்டிருந்த இஸ்ரயேல் மக்களில், அதாவது மோசேயாலும் குரு ஆரோனாலும் எண்ணப்பட்டோருள் எவரும் இவர்களிடையே இல்லை. ஏனெனில் "இவர்கள் ................................ நிலத்தில் மடிந்து விடுவர்" என்று ஆண்டவர் சொல்லியிருந்தார். எபுன்னே புதல்வன் காலேபையும் நூன் புதல்வன் யோசுவாவையும் தவிர அவர்களில் .................................... மீந்திருக்கவில்லை.

**விடைகள் :** **செபுலோன், பாலை, ஒருவனும், இஸ்ரயேல், மூதாதையர், காத்து, பென்யமின், நப்தலி, உரிமை, எகிப்து**

[வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 90

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. இலங்கையின் முதலாவது முத்திரை வெளியிடப்பட்ட ஆண்டு
   *(1857, 1850, 1860)*

2. உலகின் முதலாவது டிஜிற்றல் திரைப்படம்
   (ரம்போ, ஸ்ரார்வோர்ஸ், அவதார்)

3. இலங்கை முதன் முதலாக கிறிக்கட் டெஸ்ட் போட்டியில் வெற்றிகொண்ட நாடு
   (பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா)

4. 2003ம் ஆண்டு ஆகஸ்ட் 28ம் திகதி பூமிக்கு அருகில் வந்து சென்ற கிரகம் இது
   (செவ்வாய், புதன், சனி)

5. தமிழ் இலக்கியத்தில் இரட்டைக் காப்பியங்கள் என்று சொல்லப்படுபவை
   (வளையாபதி-குண்டலகேசி, சிலப்பதிகாரம்-மணிமேகலை, தேம்பாவணி-இரட்சணியயாத்திரிகம்)

6. வல்லெழுத்து வரவேண்டிய வாக்கியம்
   (கதவு திறந்தது, கதவே திறவாய், கதவை திறந்தேன்)

பெயர் : ........................................................................................

முகவரி : ........................................................................................

........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 90
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மீண்டும் நீ வேண்டும்

**இதயம் நிறைந்த இனிய உறவே**
**இழந்த துயரை எண்ணுந்தோறும்**
**கழிந்த நாட்கள் கண்ணில் தோன்றும்**
**கண்ணீர் தானே சாட்சியாகும்**
**ஆண்டுகள் ஒன்பது ஆனபோதும்**
**நீண்ட நினைவுகள் நிலைத்தே வாழும்**
**மீண்டும் எங்கள் தாயாய் வரவே**
**வேண்டும் எங்கள் நெஞ்சம் அம்மா!**

தோற்றம்
1944 * 08 * 31



மறைவு
2001 * 08 * 11

## திருமதி ஜெயராணி மாணிக்கராஜா

என்றும் உம் நினைவுடன் வாழும்
உங்களது அன்பு நெஞ்சங்கள்
**அன்புக் கணவர், மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**

இல:02, ஞானசூரிய சதுக்கம், திருமலை வீதி, மட்டக்களப்பு.







# போட்டி முடிவுகள்

## விவிலியம் கற்போம் - 88 விடைகள்

பாலாக்கும், மொட்டை மேடு, வார்த்தையை, கீழை மலைகளில், குன்றுகளிலிருந்து, சோபிம், யாக்கோபில், பெகோரின், பலி பீடங்களை

## அறிவை வளர்ப்போம் - 88 விடைகள்

1) நேரு 2) ரஷ்யா 3) சிறுநீரகச் செயலிழப்பு
4) இராமன் 5) கைவிடேல் 6) இடவாகு பெயர்

*பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS*

# காற்றில் கலந்துவரும்.....

இலங்கை வானொலி தேசிய சேவையில்
கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்

## செப்டெம்பர்- 2010

**கத்தோலிக்க நற்சிந்தனை - காலை 5.55 மணி**

நாள்: 11, 12, 13, 14, 15, 16, 17, 25, 26, 27, 28, 29, 30

**சிறுவர் உலகம் - மாலை 7.00 மணி**

நாள்:- 07, 21

**புதிய உலகம் - மாலை 7.00 மணி**

நாள்:- 05, 19

நிகழ்ச்சித் தொகுப்பு: மலர்வேந்தன்

தொடர்பு: சமூகத் தொடர்பு நிலையம், அ.பெ. எண் - 44, மட்டக்களப்பு.

சனி, ஞாயிறு தினங்களில்: செபம், கத்தோலிக்க நற்சிந்தனை
சக்தி FM, காலை 5.00 மணி
வழங்குபவர்: அருட்தந்தை ஜெராஜான் பேனாட்

---

இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதி ரூபா 200/= பரிசு பெறுவோர்

- ர. திமோத்தியன்
  வந்தாறுமூலை
- R. விக்டர்
  பாலையூற்று, திருகோணமலை

ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ரூபா 100/= பரிசு பெறுவோர்

- இக்னேசியா இதயராஜ்
  உவர்மலை, திருகோணமலை
- S.A.மேத்தா
  மட்டக்களப்பு

சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 39 முடிவுகள்

- முதலாம் பரிசு - 300/=
  யேசுராஜ் கார்த்திகா
  கோளாவில் - 01
  அக்கரைப்பற்று
- இரண்டாம் பரிசு - 200/=
  A.R.ஷியாமினி
  93/3, நீதிமன்ற வீதி
  திருகோணமலை
- 3ம் பரிசு - 100/=
  சா.ஜெனிஸ்ரலா
  ஜெயந்திபுரம்
  மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media